1402 402

REGD No M 3075 ✻ THE MUSIC LOVER ✻ அணா 2.

ஸங்கீத அபிமானி

A HIGH CLASS MONTHLY DEVOTED TO MUSIC

ஓர் மாதாந்திர ஸங்கீதப் பத்திரிகை.

மலர் 2 | 1935 ஷு ஆகஸ்டு மீ | இதழ்

ஸங்கீத வித்வான் திருக்கண்ணபுரம்

ஸ்ரீனிவாஸ அய்யங்கார்

S. N. 272 — Meenakshi Amutham Dehi Parts 1 & 2 Poori-Kalyani
மீனாக்ஷி அமுதம் தேஹி பாகம் 1 & 2 பூரி கல்யாணி.

இவருடைய பாணியோ அருமையானது. சாரீரமோ இனிமைக்கும் கம்பீரத்துக்கும் எந்த சாரீரத்துக்கும் பின் வாங்காதது. இவருடைய பூரி கல்யாணி ராக ஆலாபனையையும், அதில் பாடியிருக்கும் "மீனாக்ஷிமுதம்" என்ற கீர்த்தனையையும் நீங்கள் ஒருதரம் கேட்பீர்களாகில் அதை வாங்காமற் செல்ல உங்களுக்கு மனம் வராது. இந்த ரிகார்டை இன்றே கேளுங்கள்.

ஹட்சின்ஸ் & கம்பெனி,

ரிகார்டிங் டிபார்ட்மெண்ட்,

மதராஸ்.

பொருளடக்கம்

கல்பனு ஸ்வரம் படும்பாடு !

வித்வான்கள் பகுதி

Brothers and Sisters

பாட்டை நிறுத்துவதெப்படி !

புது வித்வான்களின் வெளியூர் பிர யாணம

ஹரிகதையில் தமிழ் உருப்படிகள்

கீர்த்தனைப் பகுதி

ஸபா விளம்பரங்கள்

கிராமபோன் பகுதி

உள்ளூர் வர்த்தமானங்கள்

வெளியூர் செய்திகள்

ஹாலிவுட் பாராட்டுதல்

டாக்டர் நேவல்:

ஹாலிவுட்,
அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள்,
1934-௵ நவம்பர் 14.

அருமை ஐயா!

தங்கள் "லோத்ரா" ஸ்திரீகளுக்கு வியக்கத்தக்க சிறந்த மருந்தாக இருக்கிறது. என்னுடைய மருந்துப் பெட்டியில் அதை எடுத்துப்போக ஒரு பொழுதும் மறப்பதேயில்லை. பிரயாணஞ்செய்யும் ஸ்திரீகளுக்கு அது ஒரு சிறந்த நண்பனாகும்.

தங்கள் உண்மையுள்ள,
நேவல்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

அல்லது

கேஸரி குடீரம்

ஆயுர்வேத ஔஷதசாலை : : : எழும்பூர், சென்னை.

The "Sangeetha Abhimani"

(A High Class Monthly solely devoted to Music)

EDITOR

Mr. M. Vaidyanathaswami, B.A., L.T., G.D.A.,

LIFE-MEMBERS

Mr. C. Subramanya Iyer, B.A.,
Indian Audit and Accounts Service.

Mrs. Alamelu Jayarama Iyer

ADVISORY BOARD

Vidwan Tiger K. Varadachariar, Avl.,
Professor of South Indian Music, Madras University.

,, T. S. Sabhesa Iyer Avl.
Principal, Annamalai College of Music, Annamalai University.

Gayaka Sikhamani L. Muthia Bagavathar Avl.,
Palace Vidwan, Mysore.

Prof. P. Sambamurthi, B.A., B.L.,

Sangeetha Vidwan Ariakudi T. Ramanuja Iyengar, Avl.,

,, ,, Kallidaikurichi Vedanta Bagavathar, Avl.,

,, ,, Musiri S. Subramania Iyer, Avl.,

,, ,, Maharajapuram Viswanatha Iyer, Avl.,

,, ,, Chemmangudi R. Srinivasa Iyer, Avl.,

,, ,, Kumbakonam Rajamanickam Pillai, Avl.,

,, ,, Mysore T. Chowdiah Avl.,

Gayanapatu Keerthanapatu Srimathi C. Saraswathi Bai.

OFFICE:

MYLAPORE :: MADRAS.

We hold immense stock of
Gramophone Machines and Records,
Radio apparatus and all kinds of
Musical goods.

A visit to our show rooms
will convince you.

Mahomed Ibrahim & Co.,
26-27, Rattan Bazaar,
Madras.

'ஸங்கீத அபிமானி'யின் இதழ்கள் ஆரம்பத்திலிருந்து 1934-ம் வருஷம் டிஸம்பர் மாத முடிய சேர்த்து கிளோஸ் பேபரில் அச்சிட்டு முதலாவது வால்யமாக பைண்ட் செய்திருக்கிறது. விலை ஒன்றுக்கு ரூபாய் 1-8-0. சொல்ப பிரதிகளே கைவசமிருப்பதால் உடனே எழுதுங்கள்.

ஸங்கீத அபிமானி ஆபீஸ்
மைலாப்பூர், மதறாஸ்.

FOR HIGH CLASS MUSICAL INSTRUMENTS

P. KRISHNA & Co.

(Established in 1908.)

416, Triplicane High Road, Madras.

Manufacturers of all kinds of
Musical Instruments.

Guaranteed both as to quality and
correct tuning.

VEENA A SPECIALITY

(*Repairs are also undertaken*)

வாத்தியங்கள், சங்கீத புஸ்தகங்கள், மற்றும் ஸங்கீத ஸம்மந்தமான எல்லாவித சாமான்களும் குறைந்த விலைக்கு எங்களிடம் கிடைக்கும்.

தேவையானவைகளுக்கு எழுதுங்கள்.

'ஸங்கீத அபிமானி' ஆபீஸ்,
கச்சேரி ரோட், மயிலாப்பூர், சென்னை.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

புதிதாகச் சேரும் சந்தாக்காரர்கள் தனிக் கடிதமில்லாமல் மணியார்டர் மாத்திரம் அனுப்பி விடுவதனால், அவருடைய விலாஸம், சந்தா துவக்கப்படும் மாதம் முதலிய விவரங்கள் தெரியாமல் பிரதிகள் அனுப்பவிருந்த தாமதமாகிறது. தயை செய்து அவர்கள் மணியார்டர் கூபனிலேயே சந்தா ஆரம்பிக்கும் மாதமும், தங்கள் பெயரும் பிரதி அனுப்ப வேண்டிய விலாஸமும் கூறும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர், ஸங்கீத அபிமானி ஆபீஸ்,
மைலாப்பூர்.

KARNATAKA SANGEETHA SABHA
MADRAS

Watch the date of inauguration
in these columns.

CHANGE OF ADDRESS

Sangeetha Vidwan Mayavaram
T. R. Viswanatha Sastri
now resides at

1. Ramaswami Street,
G. T. Madras.

Educated Expert gives advanced instruction in theory and practice of South Indian Music to small groups of real aspirants in your own homes at convenient hours. Unequalled service at bargain rates.

Write to "X" c/o this Paper.

A FEW MORE UNSOLICITED OPINIONS ABOUT OUR JOURNAL.

* * * * I am ever ready to give you every help I can, as I quite understand that your journal is run for a very very noble cause. Let God bless the promoters of "Sangeetha Abhimani." * * * * *

Singapore, 13-7-35. (Sd.) K. NILAKANTAN.

2. I find your monthly journal one of the most useful among those meant to impart knowledge; not only that, for the uplift of our South Indian Music it is the only way too * * *

Arni, 11-7-35. (Sd.) K. V. RADHAKRISHNAN.

3. I have gone thro' the issue of the Journal "Sangeetha Abhimani" of the month of May 1935. The portion Sangeetha Manavar Puguthi is very very interesting and needful one. All other chapters have been conducted highly efficient and up-to-date. I wish you all success. * * * *

Kalathur Zamin. Pattukotah, 23-6-35. (Sd.) SUNDARAMURTHI ACHARI.

4. We are in due receipt of your monthly journal "Sangeetha Abhimani." I am circulating it among my Committee Members. Everybody is appreciating it. * * * *

Madura, 27-5-35. (Sd.) R. V. SUBRAMANIA IYER.

5. * * * * தாங்கள் ஸங்கீத விஷயமாக எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு முயற்சிகளையும் என்னால் புகழாமல் இருக்க முடியவில்லை. * * * *

ஸ்ரீ வைகுண்டம். (Sd.) V. S. பார்த்தசாரதி அய்யங்கார்,
24-5-35 கோட்டுவாத்ய வித்வான்.

6, பத்திராதிபரவர்களுக்கு:—* * ஸங்கீதத் தொழிலில் ஈடு பட்டு சில காரணங்களால் அபிவிருத்தி யடையாதவர்களின் முன்னேற்றத்தைக் கருதி தாங்கள் செய்யும் நன் முயற்சிக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தி இந்த காரியம் விக்னமின்றி நிறைவேறுமாறு பகவானை ஸ்மரிக்கிறேன். * * * *

ஸ்ரீ பெரும்பூதூர் R. T. ஸ்ரீனிவாஸய்யர்
18-5-35. ஸங்கீத வித்வான்

7. தங்களால் பிரசுரிக்கப்படும் ஸங்கீத அபிமானி பத்திரிகையானது சங்கீத அப்யாசிகள் எல்லோரும் கவனிக்கத்தக்கதாயும், சங்கீதத்தின் உண்மை விளங்கக்கூடியதாயும் இருக்கிறது. இப்பத்திரிகை ஸங்கீதத்தில் அபிமான முள்ளவர்களும் ஸங்கீத வித்வான்களும் புகழக்கூடியதா யிருக்கிறது. இது சங்கீதத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய ஸாதகம் என்று சொல்லலாம். இப்பத்திரிகையானது மேன்மேலும் அபிவிர்த்தி யடையும்படி கடவுளை பிரார்த்திக்கிறேன்.

நீலா தெற்குமடவிளாகம் (Sd.) பிளேட் வெங்கட்டராமய்யர்,
நாகபட்டணம் 1.5-35 ஸங்கீத வித்வான்.

8. I am in due receipt of your copy (Music Lover) "Sangeetba Abhimani" and I find it a very useful one. * * * *

Koilpatti (Tinnevelly District). [Sd.) G. V. KRISHNASAMI IYER.

9. * * * * I really like the modern articles that are contributed in your journal. * * * *

27 North Street, (Sd.) Prathapam L. GOPALAKRISHNA IYER,
Karur, 19-4-35, *Sangeetha Vidwan.*

10. Herein please find a humble contribution to your journal from a music lover who has been closely following and appreciating the various issues of your journal. It is really a worthy feature of yours that the criticisms are voiced fourth with truth and justice. * * * *

Gopalapuram, Royapetah, 6-4-35. (Sd.) T. K. RAJA IYER, B.A.

11. I thank you very much for the copy of your "Sangeetha Abhimani" and I congratulate you on your starting this really efficacious line for improving South Indian Music. I have appreciated your articles. * * * *

Sangeetha Samrakshana Sabha, (Sd.) DR. V. SRIRAMACHANDRAN, L. M. & S.,
Madura, 25-3-35. *Honorary Secretary.*

நம்மிடம் கிடைக்கும் ஸங்கீத புத்தகங்கள்

Prof. P. ஸாம்பமூர்த்தி, B.A., B.L., இயற்றியவை.

		விலை ரு.	அ.	ப.
Golden Treasury of Indian Songs (Tamil)	...	1	0	0
Indian Songs Series I, II, III, IV & V (Tamil) each	...	0	6	0
Carnatic Music (Books I—III) ,,	...	1	0	0
,, Book I. ,,	...	0	4	0
,, ,, II. ,,	...	0	6	0
,, ,, III. ,,	...	0	8	0
Keerthana Sagaram—Book I. ,,	...	0	8	0
New Musical Compositions ,,	...	0	4	0
Namavali satakam ,,	...	0	3	0
Syama sastri and other famous figures of South Indian Music (Eng.)	...	0	12	0
Flute book	...	0	6	0
Melakartha Janya raga scheme with chart (Eng)	...	0	8	0
Indian Songs Ist Series (Telugu)	...	0	6	0
Staff notation (Indian tunes)	...	1	0	0

K. V. ஸ்ரீனிவாஸய்யங்கார் இயற்றியவை :—

தியாகராஜ ஹ்ருதயம்	(3 வால்யூம்கள்—தமிழ்)	...	10	0	0
	ஒவ்வொன்று		4	0	0
ஸங்கீத ரத்னாவளி	(தமிழ்)	...	3	0	0
ஸங்கீத ரஸார்ணவம்	,,	...	2	8	0
ஸங்கீத சித்ராம்பரி	,,	...	1	0	0
ஸங்கீத சிந்தாமணி	,,	...	3	0	0
திராவிடகானம்	,,	...	3	0	0
ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனம்	(தமிழ் அல்லது தெலுங்கில்)	...	3	0	0
ஸங்கீத சில்லரைக் கோர்வை	,,	...	3	0	0
கீர்த்தன ரத்னங்கள்	,,	...	1	4	0

பெருங்குளம் V. சீனிவாஸய்யங்கார் இயற்றியவை :—

கானவித்யா ப்ரகாசினி	(இரண்டு பாகங்கள்—தமிழ்)	...	4	0	0
,, ,,	முதற்பாகம்	...	2	0	0
,, ,,	இரண்டாவது பாகம்	...	2	8	0

மற்றவை :—

ஸங்கீத ஸர்வார்த்த சிந்தாமணி (P.B. ஸ்ரீனிவாசன் இயற்றியது.) (தமிழ்)...	2	8	0
ஸங்கீத தத்வ ப்ரதர்சனி-கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதர் இயற்றியது	2	0	0
Personalities in present day Music by E. Krishna Iyer, B.A., B.L.. in Eng....	1	0	0
முத்தையா பாகவதர் கீர்த்தனைகள்-பிடில் அப்பாவய்யர் இயற்றியது (தமிழ்)	2	0	0
கானசேகரம்—V. R. மணி அய்யர் எழுதியது ...	0	8	0
கீர்த்தனமாலை-பாபநாசம் சிவன் இயற்றியது(ஸ்வரப்படுத்தியது பாக. I-தமிழ்)	2	0	0
ஸ்ரீ த்யாகராஜஸ்வாமி திவ்யசரிதம்-மாந்தை எஸ். கிருஷ்ணய்யர் எழுதியது	0	8	0
கானவித்யா ப்ரகாசினி—தொகுதி I. & II. ஒவ்வொன்று ...	2	0	0
கந்தகானாமுதம் (ஸ்வரத்துடன்)—N. கோடீச்வரய்யர் B.A., இயற்றியது	2	0	0

மற்றும் வேண்டிய ஸங்கீத புத்தகங்கள் யாவும் எங்களிடம் கிடைக்கும்.

'ஸங்கீத அபிமானி' ஆபீஸ்

மைலாப்பூர்.

"ஸங்கீத அபிமானி"

ஓர் மாதாந்திர ஸங்கீதப் பத்திரிகை.

ஆசிரியர் : எம். வைத்தியநாதஸ்வாமி, பி.ஏ., எல்.டி.

மலர் 2.	1935௵ ஆகஸ்டு௴	இதழ் 8

கல்பனாஸ்வரம் படும்பாடு!

நாலுமணிக்கச்சேரியில் 3 மணி சாவகாசம் 'ஸரிகமபதநி' என்று ஏழு எழுத்துக்களையே சொல்லிப் போது போக்கினால் மிகுந்த நேரத்தில் எத்தனை பாட்டுக்கள் பாடலாம். எத்தனை ராகங்கள் ஆலாபனை செய்யலாம்! இந்த ஸ்வரம் பாடும் விதரணையை யார் ஏற்பாடு செய்தார்களோ! வட இந்திய கச்சேரிகளில் இந்த எழுத்துக்களை எண்ணும் வேடிக்கையைக் காணமுடியாது. தென்னிந்தியர்கள் சிலர் கேட்டாலன்றி வட இந்திய ஸங்கீத வித்வான்கள் ஸ்வரம் பாடமாட்டார்கள். அதனால் அவர்களுக்கு ஸ்வரம் பாடத் தெரியாதென்பது அல்ல. தாத்பரியம் என்னவெனில், ஸாஹித்யத்திற்கு அடிப்படையாக ஒவ்வொரு எழுத்துக்கும்ஸ்வரமொன்று இருப்பதனால் ஸாஹித்யத்தின் பெருமையை இழக்கச் செய்து இந்த வெறும் ஸ்வரங்களைச் சொல்லிக் காலந்தள்ளுவது அனாவசியமென்றே கருதி ஸ்வரம்பாடாமல் இருப்பதாக நினைக்கவேண்டி யிருக்கிறது. நம் தென்னிந்திய கச்சேரிமேடைகளில் ஸப்த ஸ்வரங்களை என்னென்ன வாறு மடக்கி முறுக்கி கசந்து பிழிந்து எடுக்கிறோமோ அவ்வாறு வட இந்தியர்கள் ஸாஹித்யத்தையே அகார உகாராதிகளால் செய்கிறார்கள். ஆனால் கர்னாடக ஸங்கீதத்தில் ஸ்வரம் பாடுவதென்பது புராதன ஸம்பிரதாயமாக வழங்கிவருவதனால் அதை விட்டுவிடுவது கூடாது. ஸ்வரப்ரஸ்தாரத்தை வைத்துக்கொண்டே பக்கவாத்யக்காரர்களோடு குஸ்திக்கு நின்று கச்சேரியின் பெரும்பாகத்தைக் கழிப்பதே வெறுக்கக் கூடிய அம்சமாக இருக்கிறது. இதனாலே ஸ்வர நிபுணரான காலம் சென்ற நாயனாபிள்ளையைப் பலர் கண்டித்தனர். பலர் அவர் ஸ்வரம்பாடுவதை வெறுத்தனர். அவரைத் தவிர முன்னோரில் பல உதாரணங்களையும் கூறலாம். கல்பனாஸ்வரம் பாடுவதென்பது மனோ தர்மத்தைக் காட்டக்கூடிய ஒரு அம்சமாகும். தாள நிர்ணயம், ஸ்வரதீர்மானம், ராகபாவம், சாஸ்திர பரிசயம் இவை யாவும் அதன் மூலமாக வெளியாகக்கூடும். ஆனால் ஸ்வரப்ரஸ்தார பரிக்ஷையில் யார் மணிக்கணக்காகப் பாடக்கூடுமோ அவர்தான் ஜயித்தவரென்பது தவறான எண்ணம். ஆதிதாளம் ஸமனெடுப்பில் சங்கராபரண ராகத்தில் 2 மணி விடாது ஸ்வரம் பாடிய ஒருவரை ஞானஸ்தர்கள் கல்பனாஸ்வர நிபுணராக எண்ணிவிடமாட்டார்கள். இரண்டுமணி பாடிவிட்டதனால் அவருக்கு "கல்பனாஸ்வர சிரோமணி" என்ற பட்டமும் கிடைத்துவிடாது. உண்மை என்ன? மேளகர்த்தா ராகத்தைக் கொடுத்து சதுச்ரஜாதி நடையையும் கொடுத்து ஸமனில் நிறுத்து என்றால் ஸரளிஜண்டை நன்கு ஸாதகம் செய்த யாராலும் எளிதில் பழகக்கூடும். இதற்கு மிகுந்த திறமையோ அப்யாசமோ வேண்டுவதில்லை. ஸரிகமபதநிஸ, ஸநிதபமகரிஸ என்ற வரிசைக்கிரமமான பிரயோகங்களில் நாப்பழக்கம் எளிதில் கைகூடும். அக்ஷரங்கள் ஒன்றுக்கொன்று தட்டுப்படமாட்டா. ஸஞ்சாரகிரமங்களை அப்போதைக்கப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. சதுச்ர

நடையோ மிகப் பழக்கமான 4 அக்ஷர நடையாகையால் இதிலும் கஷ்டமேயில்லை. இதைப் போன்ற லகுவான நடயில் ஸம்பூர்ணா ராகங்களில் ஸ்வரம் பாடிவிட்டு நேற்றுப் பிறந்த பாலர் பாலிகைகளும், ஆஷாட பூதிகளும் ‘ஸ்வரஞானி’ என்ற யோக்யதா பத்திரத்தை அபகரித்துச் சென்று விடுகிறார்கள். கச்சேரி கேட்கும் ஜன ஸமூகத்துக்கும் கல்பனா ஸ்வரம் பாடுவதின் மேன்மையை எப்படி கண்டறிவது என்பது பெரும் பாலும் விளங்குவதில்லை. ஸ்வரம் பாடுவதிலிருந்து விசேஷ மனோதர்மத்தையும் தேர்ச்சியையும் வெளிப்படுத்துவதற்கென்றாவது ஸங்கீதமஹா நாடுகளும், வித்வத் ஸபைகளும் இருக்க வேண்டுவதவசியம். ஆனால் அவைகள் பாடகர் பாடும் பாட்டுகளைக் கேட்டுத் தலையை அசைத்துக்கொண் டிருப்பது கூடாது. முன்காலத்தில் ராஜ ஸந்நிதானத்தில் புதிதாக பாடவரும் வித்வான் ஸபையிலுள்ளோர் கேட்கும் பிரசினைகளுக்குத் தக்கமாதிரி விடையளித்து அவர்கள் இஷ்டப்படுமாதிரி பாடிக்காட்டி பரிசு, பட்டம் முதலியவைகளைப் பெற்று சென்ற மாதிரியே இக் காலத்தில் ஒரு ஏற்பாடு இருந்தால் எவ்வளவு விசேஷமாக யிருக்கும் ! வித்வத் ஸபைகளே யோக்யதா விஸ்தரணைகச்சேரிகளை நடத்த அருகமான பீடங்கள். அவைகளே காதுக்கினிய பாட்டைக் கேட்டுக்கொண்டு தூங்குவதென்றால் கல்பனாஸ்வரமும், பல்லவியும், தற்காலம் சங்கராபரணத்திலும், ஆதி தாளத்திலும் அகப்பட்டுக்கொண்டு தொங்க வேண்டியது தான் ! யோக்யதா விஸ்தரணைக் கச்சேரிகளுக்கு பணத்தில் முழுகி வெளிக்கிளம்ப வழி தெரியாமலிருக்கும் வித்வான்கள் வரமாட்டார்கள். அவர்கள் வரவும் வேண்டாம். ஆனால் பல வருஷங்கள் அப்யாஸம் செய்து நல்ல யோக்யதையையும் பெற்று தம் வித்தையை வெளிக்காட்ட ஸந்தர்ப்பமில்லாமல் தவிக்கும்நிபுணர்கள் கட்டாயம் விஜயம் செய்வார்களல்லவா ? அதுதான் வேண்டியது. அதன் மூலம் யோக்யதைக்கு மதிப்பு உண்டாவது மன்றி, ஸங்கீதக்கலையில விசேஷ ஊக்கமும் அதிகரிக்க வழியுண்டு. அதெல்லாம் சொல்லி என்ன பலன் ? இக்காலத்தில் தான் Demonstrative performances என்றால் சபைகள் நடுநடுங்குகிறார்களே !, Model performance என்ற பெயரைக் கேட்ட வுடனேயே வித்வான்களும் வரமாட்டார்களாம், கேட்போரும் வரமாட்டார்களாம். போனால் போகட்டும். Model concert என்பது ஒன்றுண்டு என்பதாவது ஜனங்களுக்குத் தெரியுமல்லவா.

நிற்க, ஸ்வரப்ரஸ்தாரத்திலிருந்து பாடகரின் விசேஷ கல்பனா சக்தியைக் கண்டறிவதெப்படி ? தற்காலத்தில் கச்சேரி செய்யவரும் ஆண்கள், பெண்கள், யுவர்கள், யுவதிகள், பாலர்கள், பாலிகைகள் இவர்களில் கல்பனா ஸ்வரம் பாடாதவர் யாராவது உண்டா ? ஸ்வரம் பாட சக்தியில்லாமற்போனால் ரேடியோவில் கூட பாடக்கூடா தென்பதாகக் கேள்வி. கச்சேரி மேடைகளில் ஏறி உட்கார முடியுமா? ஆனால் இதில் ஒருரகஸியம் உண்டு. பதினைந்து பதினாறு வயதுள்ள இளம் பிராயத்தவர்களின் கச்சேரிகளைக் கேட்டால் அவர்கள் “சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை” என்பது மாதிரி தம் குருவிடம் சிட்டையாகப் பாடம் செய்த 4 ஆவர்த்தம் ஸ்வரங்களை வரிசையாக ஒப்பித்து விடுகிறார்கள் என்பது நன்கு புலப்படும். ஜனங்கள் போடும் கூச்சலிலும், ‘சபாஷ்’ களிலும் இதன் உண்மை மறைந்துபோய் விடுகிறது. ஒரு கீர்த்தனையில் வேண்டிய ஆவர்த்தனைகள் பாடி முடிந்தவுடன் மிகுந்த ஞாபக சக்தியுள்ள ரஸிகர்கள் ஒன்றிருவர் எழுந்து “இன்னம் கொஞ்சம் ஸ்வரம் பாடவேண்டும்” என்று கேட்டால் ‘குட்டு’ வெளியாய் விடும். ஏனெனில் பாடகர்கள் தாம் பாடினதையே திரும்பத்திரும்ப பாடநேரிடும். இதிலிருந்து ‘கல்பனாஸ்வரம் என்பது வாத்தியாரிடம் செய்த பொட்டைப்பாடம்’ என்ற தத்துவம் வெளியாகிவிடும். ஆனால் வரும் பாடகரை அப்படி யார்சோதித்துப் பார்க்கிறார்கள்? பெண்மணியின் பெயரையும் வயதையும் நோட்டீஸில் கண்டவுடன் “பாட்டு மிக நன்றாக யிருக்கும்” என்ற தீர்மானத்திற்கு வந்து விடுகிறார்கள். நேரில் வந்து பார்த்து கொஞ்சம் ரூபவதியாயும் இருக்கக் கண்டுவிட்டால், பிறகு கேட்பானேன் ! பாடியதெல்லாம் ப்ரும்மானந்தந்தான் ! ஸரளியெல்லாம் கல்பனாஸ்வரங்கள் தான் ! கொட்டாவிவிடுவதெல்லாம் ஸ்வரக்கார்வைதான் ! இதெல்லாம் ஸங்கீத கலை வளர்ந்தோங்குவதற்கு சுபசகுனங்களல்ல. ஆகவே ஸ்வரம் பாடுவதில் ‘பாடம் செய்து ஒப்பிப்பது எது’, ராகபாவமறிந்து சமயமறிந்து பாடுவது எது என்று லகுவில் கண்டுபிடிப்பது தற்கால கச்சேரிகளில் எளிதான விஷயமன்று. ஆயினும் இதைக் கண்டுபிடித்தா லன்றி கல்பனா ஸ்வரத்தின் குணங்களை அறிய முடியாது.

ஒரு சிறு பரிக்ஷை செய்து பார்க்கலாம். என்னவெனில், பாடகர்கள் மஹாநாட்டுக் கச்சேரிகளில் ஸம்பூர்ண ராகங்களிலாவது, சதுச்ரத் திருபுடை ஸமனெடுப்பிலாவது ஸ்வரம் பாடக்கூடாது என்ற ஒரு சட்ட மேற்படுத்தலாம். வித்வான்களை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணம் இதில் உண்டாக இடமேயில்லை. அவர்கள் தேர்ச்சியையும் யோக்யதையையும் வெளியிடவே இந்த சட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதென்று வைத்துக் கொள்ளுவோம். இதன் முடிவு என்னவாகக்கூடும்? ஒருவாறாக ஒப்புக்கொண்ட 100 வித்வான்களில் 90 பேர் நின்று விடுவார்கள். மீதி 10 பேரே இந்த சட்டத்துக்கு உட்பட்டு பாட சம்மதிக்கலாம். இப்படி பாடவந்த 10 பேர்களை கேட்க வந்த இரண்டு வித்வான்கள் கீழ்க்கண்ட கேள்வி கேட்கட்டும்:—"நீங்கள் பாடும் ஒரு கீர்த்தனையில் (ஆதிதாளத்தைத் தவிர) நாங்கள் ஒரு இட மெடுத்துக் கொடுக்கிறோம். அந்த விடத்தை ஆரம்பமாகக்கொண்டு 4 ஆவர்த்தம் ஸ்வரம் பாடுங்கள்" என்பதுதான். இது சொன்னவுடன் பாடவந்த 10 பேர்களில் 8 பேர்கள் விலகிவிடுவார்கள். ஆகவே 100 பாடகர்களில் 2 பேர்கள்தான் ஜன்யராகங்களில் ஆதிதாளத்தைத்தவிற மற்றதாளங்களில் தாம் பாடும் கீர்த்தனையில் எந்தவிடத்தில் வேண்டுமானாலும் ஸ்வரம் பாடக்கூடியவரென்று தெரிகிறதல்லவா ? ஆனால் 100 க்கு 2 பேர் என்று நாம் கூறியது மிகவும் தாராளமான மதிப்பு என்று நேயர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் 100 பேரில் ஒருவர்கூட தடங்காமல் இந்த இரண்டு நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு பாடமுடியாது என்பது திண்ணம். இதோடு மற்றும் சில லக்ஷண சம்பந்தமான நிபந்தனைகளைப் போட்டால், பிறகு கேட்க வேண்டியதில்லை. ஒருவரும் அகப்படமாட்டார்கள். ஆதலால் இதிலிருந்து நாம் அறியக்கூடியது என்ன ? ஸ்வரம்பாடுவதில் தாம் தேர்ச்சியடைந்தவரென்பதை வெளிக் காட்டுவதற்கு சில மர்மங்கள் இருக்கின்றன. இரண்டு நிமிஷங்கள் அவைகளையொட்டி பாடினால் போதும் பிறகு எல்லா கீர்த்தனைகளிலும் ஸ்வரம் பாட வேண்டியதில்லை. பக்க வாத்யக்காரரோடு தகிணதோம் வைப்பதில் போட்டி போடவேண்டியதில்லை. கல்பனாஸ்வரம் பாட வேண்டும்போது கவனிக்கப்படவேண்டிய அம்சங்கள் பின் வருமாறு:—

(1) ஸம்பூர்ண ராகமாக இருந்து ஆதிதாளமாக இருந்தால் ஸமனிடத்தில் பாடுவதை ஞானஸ்தர்கள் மிக மலிவாக எண்ணுவார்கள். ஆனால் இதில் பாடி தம் சாமர்த்தியத்தை வெளியாக்கக்கூடுமா ? கூடும். அது எப்படியெனில் ஒரு திருஷ்டாந்த மூலமாக விளக்கலாம். கல்யாணி ராகம் மேளகர்த்தா. மேசகல்யாணி என்பது மேளகர்த்தாவாக வழங்கப்பட்ட போதிலும் கல்யாணி கிரம ஸம்பூர்ணமாகவே தற்காலத்தில் பாடப்படுகிறது. வழக்கத்தையொட்டி கல்யாணியை மேளராகமென்றே வைத்துக் கொண்டு கவனிப்போம். இதில் ஆரம்பிக்கும் பல பாட்டுக்கள் 'க' என்ற ஸ்வரத்திலும், "ப" என்ற ஸ்வரத்திலும், "ஸ" என்ற ஸ்வரத்திலும் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆகையால் ரி, ம, நி என்று முடிவடையும்படி கல்பனாஸ்வரங்களைப் பாடுவது மிகசுலபம் இதை சிறுவர்கள் கூட பழகிவிடலாம். ஆதலால் இப்படி பாடுவதில் உயர்ந்த மனோதர்மம் வெளிப்படாது. ஆகையால் மற்றவிடங்களில் அதாவது "த" அல்லது தாரஸ்தாயி "ரி" என்ற விடங்களில் கல்பனாஸ்வரத்தை முடித்து அதற்கேற்ற அடியை எடுத்துப் பாடவேண்டும். 'நிகரி' என்று முடித்தும், 'கமபத' என்று முடித்தும் சரணம் துவக்கப் பட்டிருப்பதை கல்யாணி ஆதிதாள "வனஜாக்ஷி" என்ற வர்ணத்தில் காணலாம். "நீ" என்று சரணம் துவக்கப் பட்டிருந்தபோது, 'நிகரி' என்று மேல் ஸ்தாயில் முடித்து ஷட்ஜமவர்ஜியமாய் "நீ" என்று பாடுவது விசேஷமனோதர்மத்தைக் குறிக்கவில்லையா? இதுமாதிரி, ஸம்பூர்ண ராக மாகிலும், ஆதிதாள ஸமனெடுப் பாயினும், மேற் சொன்னமாதிரி அசாதாரணமான விடங்களில் தொடங்கும் ஸாஹித்யப் பகுதிக்கு கல்பனாஸ்வரங்களை தக்க மொகராக்களுடன் பாடினால் அது விசேஷ மனோதர்மத்தைக் குறிக்கும்.

(2) மேற்கண்ட ஒரு முறையைத்தவிற, மனோதர்மத்தை ஸம்பூர்ணராக ஸமனிடங்களின் மூலம் விளக்க மற்றொரு விதமுண்டு அதாவது, ராகபாவ வர்ஜிய வக்ரப்ரயோகங்களின் மூலமாகும். கல்யாணி மேளகர்த்தாவாயினும் அதில் ஸரிகம பதநிஸ, ஸநிதப மகரிஸ என்று ஸ்வரம் பாடினால் அதில் ஏதும் பாவமிராது. அதே மாதிரி தோடியை கிரம ஸம்பூர்ணமாக ஸ்வரங்களை உச்சரிக்க கேட்போருக்குருசியில்லாமல் சப்பென்று இருக்கும். காமவர்தனியிலும் ஸம்பூர்ணப்ரயோ

கம் பாவத்தைக் கொடுக்காது. ஆகவே ஸம னெடுப்பாயிருந்தாலும், கல்யாணியை ஷட்ஜம பஞ்சம வர்ஜியமாயும், வக்ரமாயும், தோடியை பஞ்சமத்தை விலக்கியும், காமவர்த்தனியில் பஞ்சமத்தை நீக்கி மா தா நீ ஸா என்று பிடித்தும் விசேஷ போஷிப்பைக் கொடுத்து பாடலாம். இம்மாதிரி ஸம்பூர்ண ராகங்களில் ஸ்வரம் பாடுவதனல் தான் பெரிய வித்வான் களின் உயர்ந்தமனேதர்மம் வெளியாகிறது.

(3) இப்பொழுது ராகத்தை ஸம்பூர்ணமாகவே வைத்துக்கொண்டு தாள எடுப்பை மாத்திரம் ஸமனில்லாமல சற்று கடினமான தாகச் செய்து கொள்ளலாம். ஆதிதாளத்தில், கால், அரை, முக்கால் அதீத அனுகத எடுப்புக்கள், மிச்ரசாபு, ஜம்பை ஸமன் விஷம எடுப்புக்கள் இவைகளில் ஸ்வரம் பாடுவது ஸம்பூர்ண ராகமாயினும் வித்வத்தையும் தேர்ச்சியையும் வெளிக்காட்டும். அதிலும் முன் சொன்னமாதிரி அசாதாரணமான ஸ்வரங்களில் ஆரம்பிக்கும் ஸாஹித்ய பாகத்துக்கு கல்பனஸ்வரங்கள் பாடுவது இன்னும் கடினம். இதிலும் ஸ்வரங்களில் விச்ராந்தி எடுக்குமிடங்கள் ஸமனுக இராமல் ஸாஹித்யம் ஆரம்பிக்குமிடமாகவே யிருப்பது கவனிக்கத்தக்கது அரையெடத்தில் ஆரம்பிக்கும் கீர்தத்னைக்கு ஸ்வரம் பாடிவரும் போது, மத்தியில் கார்வை கொள்ளு மிடங்கள் ஸமனு யிருத்தல் விசேஷமாகக்காணலாம். விச்ராந்திகொள்ளு மிடங்களும் அரை யெடமாயிருப்பினும், மொகராக்கள் முத்தாயிப்புகள் இவை அதே அரை எடத்தில் ஆரம்பித்தாலும் அது விசேஷ ஸாதகத்தை வெளிக்காட்டும். இந்த சமயங்களில் ஸம்பூர்ண ராகங்களா யிருந்தால் அதில் ஸ்வரம் பாடுவது எளி தென்று நினைக்கக் கூடாது.

(4) தாளம் லகுவாயிருப்பினும் ஜன்ய வக்ர ராகங்களில் ஸ்வரம் பாடுவதே வித்வானின் லக்ஷணமாகும். தற்கால மேடைக் கச்சேரிகள் ஒவ்வொன்றிலும் அநேக ராகங்களில் அநேக கீர்த்தனைகள் பாடப்படுகின்றன. தினம் புது புது கீர்த்தனைகள் வந்துகொண்டிருக்கின்றன. திடீரென்று கேள்விப்படாத ஒருகீர்த்தனையை பீடிகை (Introductory Alapana) இல்லாமல் பாடி, கேட்கும் வித்வான்களுக்கு என்னராகமென்று புரியாமல் அடித்து ஜயித்து விடுகின்றனர் சில மேதாவிகள்! அடடா, அபூர்வ ராகத்தில் கீர்த்தனை பாடும் நிபுணர் அந்த அபூர்வராகத்தையே இரண்டு நிமிஷம் ஆலாபனம் செய்யக்கூடாதா? அல்லது அந்தக் கீர்த்தனையில் நாம் முன் சொன்னமாதிரி ஸமனல்லாத விடங்களில் விசேஷ ஆரம்பிப்பில் நாலாவ்ருதம் கல்பனு ஸ்வரங்கள் பாடக் கூடாதா? அங்கேதான் இருக்கிறது மர்மம்! நாராயணகௌள, பூர்ணசந்திரிகா, கௌளீபந்து, புன்னுகவராளி, கோகிலத்வனி, ஸஹானு, முதலிய ராகங்களில் கீர்த்தனைகள் அடுக்கடுக்காய்ப் பாடுவார்கள். ஆனல் கல்பனை ஸ்வரம் பாடுவதற்கென்று தோடியோ, சங்காபரணமோ, காமவர்த்தனியோ, கரகரப்ரியாவோ, ஹரி காம்போதியோ பொறுக்கியெடுத்துக்கொண்டு மணிக்கணக்காக சரமாரியாய் ஸ்வரங்களைப் பொழிவார்கள். இந்த ராகங்களில் பாடும்கீர்த்தனைகள் பெரும்பாலும் ஆதி அல்லது ரூபகதாளமாகவே யிருக்கும். தக்க அப்யாஸமாவது, ஸமயோசித விதரணையாவது இல்லாத சில பால்ய சிங்கங்கள் "தைரியமே ஜயம்" என்ற பழமொழியை நாடி மிச்ரசாபு தாளத்தில் ஸஹானு கீர்த்தனையை எடுத்துக்கொண்டு துரிதகாலத்தில் 'ஸரிகமபதநிஸ' ஸநிதபமகரிஸ' என்று ஸர்வஸம்பூர்ணமாய் அடிப்பார்கள். கேட்கும் ரஸிகர்களில் அநேகர் சாபு தாளத்தில் ஸஹானுராகத்தில் வாய் உளராமல் ஸ்வரம் பாடிவிட்டாரென்று ஆச்சரியப்படுவார்கள். சிறுவயதா யிருப்பின் உடனே பாடகருக்கு ஒரு மெடல் நிச்சயம்.

நிற்க, நாம் கூறவந்தது வேறு விஷயம். வித்வத்தையும் முதிர்ந்த தேர்ச்சியையும் வெளிக்காட்ட வக்ர ராகங்களில், சாபு, த்ரிபுடை, ஜம்பை முதலிய கடினதாளங்களில் ஸமனல்லாத மற்றவிடங்களில் சொன்னதை திரும்பத் திரும்ப சொல்லாமல், வாயும் குழறுமல் நாலு ஆவர்த்தங்கள் ஆரம்பம் முடிவு சபையோர் எதிர்பார்க்கும்படி 5 நிமிஷங்கள் பாடினல் யதேஷ்டம்! இரண்டு கீர்த்தனைகளுக்கு இம்மாதிரி ஸ்வரம் பாடிவிட்டால் ஒரு கச்சேரிக்கு அது அபரிமிதம்! ஜனங்கள உடனே அவர் பெரிய வித்வான் என்று வாய்கூசாமல் புகழுவார்கள். காலமும் வீணுகாது. பக்க வாத்யக் காரர்களும், காசுக்கு 4 மணி உழைத்தே தீர வேண்டும் என்று வீராவேசம் கொண்டு ஒரே சப்தமயமாய் காது கொப்பளிக்கும்படி அடிக்க வேண்டிய தில்லை. தேகம் சிரமப் படாமல் வாசிக்க ஒப்புக்கொண்ட பணத்தோடு "ப்ரக்யாதி" என்ற இனுமும் பெற்றுக்கொண்டு போகலாம். ஒரு சிறு உதாரணம்கூறி முடிப்போம். மஹா ராஜபுரம் விசுவநா தய்யரின்

மனோ தர்மத்தையும், விசேஷ கல்பனையையும் புகழாதவரில்லை. அதற்கு அறிகுறியாக அவர் என்ன செய்கிறார்? ஒவ்வொரு கீர்த்தனைக்கும் ஸ்வரம் பாடுகிறாரா? இல்லை. மணிக்கணக்காக ஸ்வரக் கோர்வைகளை வைத்துக்கொண்டு வாத்யக்காரர்களோடு குஸ்திக்கு நிற்கிறாரா? அதுவுமில்லை. அவர் பாடுவதெல்லாம் இரண்டுமூன்று கீர்த்தனங்களில் இரண்டாவ்ருதம் ஸ்வரம் தான். ஆனால் அவர் பொறுக்கி யெடுக்கும் கீர்த்தனைகளும், தாளங்களும், ராகங்களும் விசேஷமானவை. ஒரு கச்சேரியில் பூரி கல்யாணியில் ச்யாமா சாஸ்திரியா லியற்றப்பட்ட மிச்ரசாபு தாளத்தில், நின்னுவினா" என்ற உருப்படிக்கும், பட்டணம் சுப்ரமணிய அய்யரின் ஆதிதாளம் முக்காலிடம் 'கதனகுதூஹலம்' என்ற ராகத்திலுள்ள 'ரகுவம்ச ஸுதாம்' என்ற கீர்த்தனைக்கும், ஆதிதாளம் "கமாஸ்" ராகத்திலுள்ள தியாகய்யரின் "ஸீதாபதே" என்ற கீர்த்தனைக்கும் இரண்டு மூன்று ஆவர்த்தனைகள் ஸ்வரம் பாடினார். இம்மூன்றையும் சேர்த்தால் அதிகம் 15 நிமிஷத்துக்கு மேலிரவே யிராது. ஆயினும், கேட்போர்கள் மற்றெந்த கச்சேரிகளையும் விட, இக்கச்சேரியின் கல்பனாஸ்வர விசேஷத்தைப் புகழ்ந்தனர். ஏன்? 3 கீர்த்தனைகளும் வெவ்வேறு கர்த்தாக்களா லியற்றப்பெற்றது. ஜன்யவக்ர ராகங்களிலுள்ளது. கஷ்டமான எடுப்புக்களை யுடையது. நடைபேதமுள்ளது.

ஸ்வரம் பாடுவதில் இந்த மர்மங்களை வித்வான்கள் சற்று கவனித்து ஸாதகம் செய்தால், 2 மணி 3 மணி ஸ்வரங்களை கசக்கிப் பிழிந்து பக்க வாத்யக்காரர்களை கஸரத்துவாங்கி கேட்போரையும் எழுந்துபோகும்படி செய்வதைவிட, காலத்தை வீணாக்காமல் இனிமையாக 5 நிமிஷம் ஸ்வரம்பாடி ஜனங்களுடைய கரகோஷத்தையும் லகுவில்பெறுவது ஸாத்யமாகும்.

வித்வான்கள் பகுதி.

ஸங்கீத வித்தையில் வெகுகாலம் பயின்று தேர்ச்சியடைந்து லக்ஷண வாதங்களில் தகுந்தபடி விடையளிக்கக்கூடிய சக்தி ஒன்று. லக்ஷண பரிசயம் அதிகமாயில்லாமற் போனாலும் ராக பாவத்தோடு பாடி ஜனங்களைத் திருப்தி செய்யக்கூடிய சக்தி மற்றொன்று. இவைகளில் இரண்டும் ஒருங்கே வாய்த்திருப்பது மிக துர்லபம். வித்வான்களெல்லாரும் பாடகரல்லர் பாடகரெல்லாம் வித்வான்களல்லர். ஸங்கீதத்தை ஸம்பாத்தியத் தொழிலாக நடத்தவேண்டியவர் பின் சொன்ன சக்தியையே விருத்தி செய்து கொள்ளவேண்டும். ஸங்கீதத்தில் ரஸபாவ மென்பது சாரீரத்தை மாத்திரம் பொறுத்த அம்சமன்று. இன்னும் அநேக விஷயங்கள் அதில் சேர்ந்திருக்கின்றன. விதரணையினாலும், சமயோசிதமாக பாடுவதினாலும் ரஸிகத்தன்மை குறையாதவாறு சச்சேரியை நடத்தலாம். விசேஷ வித்தையோ சாரீரமோ இருந்தும்கூட சில சமயங்களில் கச்சேரி ருக பாவம் குறைந்து சோபிக்காமல் போவதும் உண்டு. பொதுவாக, கச்சேரி மேடையில் வீற்றிருக்கும் வித்வான்கள் அந்தந்த கச்சேரியில் விஜயம் செய்திருக்கும் ஜன ஸமூகத்தின் நோக்கத்தை யனுசரித்தே பாடவேண்டும். தற்காலத்தில் பாட்டு கேட்க வருபவர்கள் பலமாதிரி நோக்க முடையவர்களாகவும் வெவ்வேறு விதமான ரசிகத் தன்மை யுடையவர்களுமாயிருக்கிறார்கள். தவிர ராஜாங்க நிர்வாகத்தில் வெவ்வேறு கக்ஷிகள் இருப்பதுபோல ஸங்கீத அபிமானிகளிலும் பல கக்ஷிகள் உண்டு. சிலர் அரியக்குடி கக்ஷி, மற்றும் சிலர் முசிரி கக்ஷி, இன்னும் அநேகர் செம்மங்குடி கக்ஷி, மகாராஜபுரம் கக்ஷி, இவ்விதமாக பாடகருக்குத் தகுந்தமாதிரி அநேக கக்ஷிகள் உள்ளன. ஒவ்வொரு கக்ஷியினரும் தம்தம் பாடகரையே சிரேஷ்டராக சமய சந்தர்பமில்லாமல் கூறிக்கொண்டே யிருப்பார்கள். ஜில்லாக்களைச் சேர்ந்த கக்ஷிகளும் வரவர அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இவைகளில் மைசூர், மலையாளம், திருநெல்வேலி, தஞ்சாவூர் கக்ஷிகள் பிரதானமானவை. ஸ்திரீ கக்ஷி. ஆந்திரர் கக்ஷி இப்படிப்பட்ட பிரிவுகளும் உண்டு. இவ்வளவு மாதிரியான நோக்கங்களை யுடைய பலர் ஒருவரின் பாட்டைக் கேட்க வந்து உட்கார்ந்தால் அவர்கள் யாவருக்கும் சிரத்தை குன்றாதவாறு எந்தப் பாடகரால் பாடி சமாளிக்க முடியும்? ஆனால் இவர்கள் மத்தியில் எழுந்து போகாதவாறு உபாயம் தேடிக்கொண்டாலொழிய

கச்சேரியில் நல்ல பெயர் வாங்குவது சாத்யமன்று. எல்லாருக்கும் பொதுவான சில பாட்டுகளும், அவரவர்கள் விசேஷமாக விரும்பும் பாட்டுக்களில் ஒன்றிரண்டும் பாடி வருவதே உத்தமம். பாட்டு அட்டவணை தயாரித்துக்கொண்டு வந்து அதின்படி வரிசையாகப் பாடி வருவது ஜனங்களை உத்ஸாகப்படுத்துவதற்கு அறிகுறியாகாது. ஏனெனில் ஜனங்களுக்கு பாடகர் அடுத்த பாட்டு எந்த ராகத்தில் பாடப்போகிறார் என்று தெரியாதவரையிலும் ஊக்கமாக கவனித்துக் கொண்டிருப்பார்கள். பாடகரின் அட்டவணை தெரிந்து விட்டால் பலர் "இதுதானா" என்று தூங்க ஆரம்பிப்பார்கள். மற்றும் பலர் எழுந்தும் போய் விடுவார்கள். பாடகர் தம் பாட்டு ஒவ்வொன்றையும் ஜனங்கள் எவ்வாறு விரும்புகிறார்களென்று அவர்களின் முககுறிகளால் கண்டறியவேண்டும். "ஏதோ எனக்குத் தெரிந்ததைப் பாடுகிறேன், ஜனங்களைப்பற்றி நமக்கென்ன கவலை, கேட்டாற் கேட்கட்டும், இல்லாமற்போனால் எழுந்து போகட்டும்" என்பது மதியீனம். நாலு கீர்த்தனைபாடி ஜனங்கள் அலுத்து உட்கார்ந்திருப்பதாகக் காணப்பட்டால், கீர்த்தனம் பாடுவதை நிறுத்தி ராகமோ, ஸ்வரவிஸ்தாரமோ பக்க வாத்யம் தனி ஆவர்த்தமோ எத்தனிக்க வேண்டும், ஜனங்கள் சத்தம் போடுவதாகத் தெரிந்தால், விருவிருப்பான துரிதகால சில்லரைப் பாட்டுக்களைப்பாடி மறுபடியும் பாட்டில் ஊக்கமுண்டாக்க வேண்டும். பாட்டைவிட பக்க வாத்யங்களை ஜனங்கள் ரஸிப்பதாகத் தோன்றினால் அவர்களுக்கு அதிகத் தனி ஆவர்த்தங்கள் கொடுப்பது நல்லது. இதெல்லாம் சமயோசிதமாக அறிந்துகொள்ள வேண்டுமே தவிர சட்ட புத்தகத்தில் காணும் விஷயங்களல்ல. ஜனங்கள் ஒவ்வொருவராக கச்சேரியைவிட்டு எழுந்துபோவது நல்ல கச்சேரிக்கு அடையாளமல்ல. இதை கூடுமானவரையில் தடுக்க முயல வேண்டும். சென்னையில் சமீபத்தில் நடந்த ஒரு கச்சேரியில் பிரபல வித்வானொருவர் தக்க பக்க வாத்யங்களுடன் கச்சேரி செய்தார். ஆனால் ஆரம்பித்த ஒருமணி சாவகாசத்திலிருந்தே ஜனங்கள் ஒவ்வொருவராக எழுந்து போக ஆரம்பித்தனர், இதை சற்றும் லக்ஷியம் செய்யாமற் பாடகர் தமக்குத் தோன்றியதை பாடிக்கொண்டே போனார். செக்ரிடரியார் எழுந்து பேசி 9 மணி வரைக்கும் வழக்கம் போல் கச்சேரி நடக்குமென்றும் ஜனங்கள் அவசரப்பட வேண்டாமென்றும் கூறினார். இது வித்வானுக்கு வேதவாக்காகத் தோன்றிவிட்டது. 8 மணிக்குப் பிறகு 3 நான்கு பேரே கொட்டகையில் வீற்றிருந்தனராயினும் பாடகர் 9 மணிக்கு முன் நிறுத்துவதில்லை என்ற விருதம் பூண்டு கடைசி மனிதர் எழுந்து போகும்வரை விடாது பாடி ஜயித்தார். இந்தக் கச்சேரியின் முடிவைப்பற்றி நாம் என்ன கூறுவது? பிறர் கேட்பதற்காகவே நாம் பாடுகிறோம் என்ற எண்ணத்தைக்கூட மறந்து பாடுகின்றனரே சில வித்வான்கள் அதுதாம் நமக்கு விந்தையாக இருக்கிறது. மற்றும் பல கச்சேரிகள் ஆரம்பத்தில் சுமார் இரண்டுமணிவரை கேட்க ரஸமாயிருந்து பின்பாகம் இதுகாரணத்தினாலேயே சிரத்தை குறைந்து முடியும் சமயத்தில் எதும் ரஸபாவமேயில்லாமற் போய் விடுகின்றன. தம் பாட்டை கேட்போருக்குத் தக்கமாதிரி அமைத்தும், காலத்தை அதிக்ரமித்து ஜனங்களுக்கு களைப்பு தட்டாமல் பாதுகாத்தும், ஜனங்கள் எழுந்துபோக ஆரம்பிக்கும் சின்னங்களை கவனித்து கச்சேரியின் மிஞ்சிய பாகத்தைக் குறுக்கியும், தம் பாட்டு கேட்போர் முன்னிலையில் எடுபடும்படி செய்ய வேண்டியது ஒவ்வொரு வித்வானும் கவனிக்க வேண்டிய விஷயம். ஜனங்கள் வெகுவாக ரஸிக்காத கச்சேரியை குறித்தகாலம்வரை நீடிக்கச்செய்து அதற்குள்ள கொஞ்சநஞ்ச மதிப்பையும் போக்குவதைவிட குறிப்பிட்ட நேரத்துக்கு முந்தியே முடித்துவிடுவது விரும்பத் தக்கது. இயற்கையம்சமான சாரீரத்திலும், தம் தேர்ச்சியிலுமே தம் முழு நம்பிக்கையையும் நாட்டி ஸமய ஸந்தர்ப்பங்களை கவனியாததனால் தம்பாட்டு எடுபடாமல் தவிக்கும் வித்வான்களுக்கு இவ்வத்தியாயத்தில் காணும் குறிப்புகள் ஸமய சஞ்சீவியைப் போன்றவையாகும்.

CONCERT BUREAU,

56, CUTCHERI ROAD, MYLAPORE

Saves you all the Trouble and
Expense by fixing Artists for
your Musical Performances

arranging Musical tours etc. supplying Screen Stars & attending to the Musical Education of your Children.

Brothers and Sisters.

The artificial relationship between the vocalist and the accompaniments or the Bhagavathar and his back group is gradually vanishing, nay, has almost vanished. Organisers need not hereafter worry themselves about selection of fitting accompaniments to suit the vidwan. The out-of-proportion rates offered to each, irrespective of his position or importance, on the musical platform, need not concern the impartial spectator very much. Incidental expenses due to travel from distant places for a single performance can be saved. What is all this due to? Can our reader imagine the cause for a moment? Brothers and Sisters—tied by blood relationship form a group by themselves and save us all the trouble and expenses detailed above. There they are, ready to give a performance for a single consolidated amount in lump, saving us the worry of a division. There are, for example Madura brothers, Trichy brothers, Alanthur brothers; Palayur brothers and now a Tanjore brothers too, a not un-welcome addition to the long list of brothers! Nay, sisters are not lacking in numbers! There are Trivandrum sisters, Kolar sisters, Conjeeveram sisters, Nagalapuram sisters, Chitoor sisters, Hamsaveni sisters and a host of others too! Daughters and Grand-daughters are also ample! Krishnaveni daughters, Damayanthi daughters, Dhanam daughters, Kalyani daughters, etc. A happy group all, they save us our memory, our purse and our art too! But viewed from the light of Music, one would wonder how far these group-performances can compare with concerts by individual experts grouped for a particular occasion. The latter will be undoubtedly more enjoyable and better functioning. When the essence of our art, individuality as others call it, submits itself to family ties and aims at uniformity, the result cannot be the best.

So much for a family group of brothers or sisters containing a Vocalist, a Violinist and a Mridangist or some more accompanists if Creator had been more bounteous in forming the group. But there are others who vie wlth each other in the same sphere, *e.g.*, two vocalists, two violinists and so on. Of the type of brothers like Karaikudi Veena brothers we would fain have any number; for in them there are individuality, age, experience, diversity in uniformity and mastery, all gleaming before the most undetective eye. But the present brothers and sisters very often do nothing but vomit most of the undigested stuff that they have swallowed together under their slip-shod masters. This uniformity in want of experience or poor mastery of the art compels recognition as a high qualification before the group-hunting audience. It is practically impossible to display the skill of two vocalists on a platform when we not seldom find that time is not sufficient even for one. The brotherhood or sisterhood has built its foundation on slippery grounds (*i.e.*) the one to supply what the other is wanting in. So much so, when we have a concert by one such brothers or sisters we should be prepared to hear them sing a dozen songs together, to distribute a raga elaboration between themselves—which at times is nothing more than repetition—and on a few occasions, on suggestion from the front rows, attempt different songs individually. Though of the same family, Nature does not equip them with the same pitched voice or the same tension in breath and in trying to conform to the common tune set for them, they compel us to judge them by two standards. Thus the better-gifted rises into prominence while the other merely supplies the 's' for the 'Sister' to make it plural. A pitiable fate! If the less fortunate of the two had attempted to give an entertainment solo, without her gifted sister by her side, she might not have had such a terrible fall!

In short, it is extremely doubtful if any one—whatever sex he or she might belong to—who has had good training in the art sufficient to make himself confident—will

ever risk his individuality by singing with another. Stranger it is that none of these brothers, sisters or daughters has ever come to occupy the supreme position that some vidwans are holding to the present day! This is because our Music is entirely individualistic and cannot rise to rapturous heights on joint platforms. Of course, there is one consolation in hearing a brothers or sisters sing. For two people singing together cannot bore the hearer to the same vexatious limit as one would do singly if he be poorly equipped. But this should not prevent us from enjoying the best in our art which is possible only when the musician on the platform is entirely free to chalk out his own programme to make the best use of his talents in making his music most enjoyable to the hearers. It is a fundamentally erroneous notion that two artists, brothers trained together under the same master, would join and give a music performance with better success than could be achieved singly by either of them. It is hoped that in judging music loaded opinions in favour of these brothers and sisters is not allowed to creep in, but keep the standard of the art in the same high level which it was maintaining in the maiden years of this twentieth century.

பாட்டை நிறுத்துவதெப்படி?

இப்படி ஒரு கேள்வி கேட்டால் யாருக்குத்தான் பதில் கூறத் தெரியாது? "பாட்டுப்பாடியது போதும், மணியாய்விட்டது, மங்களம் பாடலாம்" இதில் ஏதாவதொன்றைக் கூறிவிட்டாலோ அல்லது சுருதிப்பெட்டியை மூடிவிட்டாலோ பாட்டு நிறுத்தியாய்விடும். இப்படி கச்சேரி நிறுத்துவதைப்பற்றி இங்கே கூறப்போவதில்லை. ஒவ்வொருபாட்டையும் முடித்து நிறுத்தும்போது, அனுபல்லவியிலோ, பல்லவியிலோ, சரணத்திலோ ஒரு பதத்தைப் பாடி அகார உகாராதிகளால் விச்ராந்தி எடுக்கும்போதும் கவனிக்க வேண்டிய ஸம்பிரதாய விதிகள் பல உண்டு. அவைகளையே இங்கு குறித்துக் காட்டுவோம்.

முதலாவதாக, கீர்த்தனத்தைப்பாடி முடிக்கும்போது எந்த ஸவரத்தில் நிறுத்துவதென்பதை கவனிக்க வேண்டும். கண்ணை மூடிக்கொண்டு, "கொக்குக்கு ஒன்றே மதி" என்பதைப்போல எல்லாப் பாட்டுகளையும் ஷட்ஜமத்திலாவது பஞ்சமத்திலாவது நிறுத்துவது பொருந்தாது. நிறுத்தும் ஸ்வரமானது ராக பாவத்துக்கு ஒட்டினாற்போலும், கீர்த்தனையின் அர்த்தத்துக்கு பொருந்தும் மாதிரியும் இருக்கவேண்டும். "ஸ்வரராக ஸுதாரஸ" என்று முடிக்கும்போது பஞ்சமத்தில் நிறுத்துவதே கிரமமானது. அதைவிட்டு காந்தாரத்தில் முடிப்பது பொருந்தாது. அம்மாதிரியே கரஹரப்ரியாவில் "ராமாநீயெட" என்ற கீர்த்தனை ஷட்ஜமத்தில் ஆரம்பிப்பதனால் அதை "ராமா நீயெட" என்று ஷட்ஜமத்திலேயே நிறுத்தவேண்டும். ஹரிகாம்போதியில் "வினதாஸுத" என்னும் உருப்படியானது மேல் ஷட்ஜமத்திலேயே முடிவடைய வேண்டும். நல்ல தேர்ச்சியும், பாஷா ஞானமும் உள்ள ஸங்கீத வித்வானுக்கு எந்த ஸ்வரத்தில் நிறுத்தவேண்டுவதென்பது நிச்சயமாய்ப் புலப்படும். இளைய வித்வான்களுக்கும் உணர்ச்சியற்றோருக்கும் நிறுத்தவேண்டிய ஸ்தானம் புலப்படாது. நிகாவை ஒட்டி நிறுத்தும் ஸ்வரமானது கேட்போருக்கு விரஸமாகத் தோன்றும். சற்று விரிவான உதாரணம் ஒன்று கூறுவோம். காம்போதி ராகத்தைப்பாடி நிறுத்தவேண்டியது ஸ்நிபதாஸா என்ற மேல் ஷட்ஜமஸ்தானமாகும். இதை மாத்திரம் வைத்துக்கொண்டு பல வித்வான்கள் எல்லா காம்போதி கீர்த்தனைகளையும் மேல் ஷட்ஜமத்திலேயே நிறுத்திப்பாடி நாம் எவ்வளவுதரம் கேட்டிருக்கிறோம்! "ஸ்ரீ ஸப்ரமணியாய நமஸ்தே" என்ற தீக்ஷிதர் கிருதியை கீழ் ஷட்ஜமத்திலேயே நிறுத்தவேண்டும் என்ற கிரமம் பலருக்கு தெரிந்திருக்கலாம். "எவரிமாட" கீர்த்தனையை பஞ்சமத்திலா ஷட்ஜமத்திலா எந்த விடத்தில் நிறுத்துவதென்று பல பாடகர்களுக்கு இன்னும் ஸந்தேகமாம். கிராமபோன் ரிகார்டுகளிலோ இரண்டிடங்களிலும் நிறுத்தி நாம் காண்கிறோம். இந்த ஸந்தேகத்தை எப்படி தீர்ப்பது? "எவரிமாட விநவோ" என்ற தெலுங்கு பதத்திற்கு

பொருளும் தெரிந்து உணர்ச்சி ஸங்கீதத்தில் உண்டு என்ற தத்துவமும் அறிந்திருந்தால் இந்த ஸந்தேகம் ஏற்படவேண்டிய அவசியமே யில்லை. ஏனெனில் “[எவரிமாட வினாவோ = யார்பேச்சைக் கேட்டாயோ] “எவரிமாடவினாவோ” என்ற பதத்தை ஷட்ஜமத்தில் நிறுத்துவது அசம்பாவிதமென்பது அப்பொழுது தானாகவே புலப்படும். “யார் பேச்சைக் கேட்டாயோ” என்று ஒருவர் பிறரைக் கேட்கும்போது தாழ்ந்த குரலில் கேட்பரே யொழிய அதட்டும் குரலில் மேல் ஷட்ஜமம் வரை உயர்த்தி கேட்கமாட்டார்கள். ஆகவே பஞ்சமத்தில் நிறுத்துவதே இக் கீர்த்தனையின் பாவத்துக்குப் பொருந்துமென்பது விடங்கும். இம்மாதிரியே ஒவ்வொரு கீர்த்தனையின் பொருளையும் சோதித்தறிந்து எந்த ஸ்வரத்தில் நிறுத்துவது கிரமமென்றும் எது பொருந்தாதென்றும் ரூபிக்கலாம். இவ்வளவு பாவ அறிவு அவசியமா யிருக்க, போதகர் ஏதோ பாடத்தைச்சொல்லிவிட்டு மாதம் முதல் தேதியன்று சம்பளத்தைக் குறைவின்றி வாங்கிச் சென்றால் நம் நாட்டு சிறுவர் சிறுமிகளுக்கு ஸங்கீதத்திலிருந்து உணர்ச்சியாவது, ஏற்படவாவது? எல்லாம் ஆகாசக் கோட்டைதான். இதனாலேயே ஒரு பாட்டின் பொருளை அறியாது அதைப் பாடலாகாதென்பது சான்றோர் மொழி.

இரண்டாவதாக, விச்ராந்தியடையும் இடங்களில் அகார உகாராதிகளைக் கவனிப்போம். “அ” என்று முடிவடையு மிடங்களில் “உ”, என்று நிறுத்துவதும் “உ” என்று பதம் முடிவடையு மிடங்களில் “இ” என்று நிறுத்துவதும் தற்காலத்தில் ஸர்வஸகஜமாக விருக்கிறது உதாரணமாக “விடமுசாயவே” ஈ,,—என்று சிலர் நிறுத்துகிறார்கள். மற்றும் சிலர் “இகநன்னு” ஆ,,—என்று அகார விச்ராந்தி எடுக்கிறார்கள். இன்னும் சிலர் ‘கனுடகுநீ மஹாக்ருபா”—ரீ ,,,, என்று பாடுகிறார்கள். இது எல்லாம் எவ்வாறு அகிரமமென்று நாம் சொல்லத் தேவையில்லை. அகாரம், உகாரம் இவை பதங்களின் கடைசியில் வரும்போது இகாரத்தில் ரீ,, என்று விச்ராந்திகொள்வது நியாயமே. அகாரத்துக்கும் இகாரத்துக்கும் பதிலாக உ,, என்று நிற்பதும், ஒன்றும் தெரியாமல் மூக்கால் ஸ்வரம்பிடித்து நிறுத்துவதும் ஸம்பிரதாய விரோதங்கள் இயற்கையாக “சங்கரீ” என்று “இ”யில் முடியும்போது அதை “அ” வாக மாற்றுவது அனாவசியம். “உ” வை பல தடவை “உ”வாகவே உச்சரித்து நிறுத்தலாம். அதனால் டாவம் கெடாது. “அக்ஷயலிங்கவிபோ” என்று நிற்கவேண்டிய விடத்தில் “ஓ,” என்ற இயற்கை த்வனியை விட்டு “ஈ” என்று பல்லை இளிப்பது நகைப்புக் கிடமாகும். அதே மாதிரி “ராகரத்ன மாலிகசே” என்று முடிக்கும்போது இயற்கையான “ஏ” த்வனியிலேயே நிற்கவேண்டும். பொதுவில் எந்த எந்த உயிரெழுத்துக்களில் பதங்கள் முடிவடைகின்றனவோ அதையே உச்சரித்து பாவத்துக்குப் பொருத்தமான ஸ்வரஸ்தானத்தில் நிறுத்துவதே கவனிக்கவேண்டிய முறையாகும்.

மூன்றாவதாக, பதத்தைச் சொல்லி முடிப்பதையும்பற்றி ஒருவார்த்தை கூறவேண்டியிருக்கிறது. எந்தப் பதத்தையும் துண்டிப்பதாவது சிதைப்பதாவது கூடாது. முழுப்பதத்தையும் பாடியே நிறுத்தவேண்டுவதவசியம். அதற்கு வேண்டிய விச்ராந்தி எடுக்க தாளப்பகுதி குறைவாக இருந்தால் இன்னொருபகுதி தாளத்தை உபயோகித்து முழுவார்த்தையும் உச்சரித்து நிறுத்தவேண்டும். இதைப்பற்றி தற்காலத்தில் கவனமே செலுத்தாதிருப்பது மிக வருந்தத்தக்க விஷயம். ஏனெனில், தியாகய்யரின் “சம்போ மஹாதேவ” என்ற கீர்த்தனையைப்பாடி முடிவில் “சம்ம்ம்” என்று மூக்கால் நிறுத்துவதைவிட அசம்பாவிதம் வேறெதுவுமில்லை. அந்த “சம்” ஓடு “போ” என்ற ஒரு எழுத்தையும்சேர்த்து “சம்போ” என்ற முழுப் பதத்தையும் வாய்நிறையச் சொல்லி கார்வைகொண்டு நிறுத்தக்கூடாதா? அடடா! ‘சம்போ’ என்று ஸுஸ்வரமாக கூறிவிட்டால் ஒருவேளை பரமேச்வரன் கானத்துக்கீடுபட்டு பாடகருக்கு நற்கதியளித்துவிட்டால், கலியுக தர்மம் எவ்வாறு நடக்கும் என்று பயந்தோ என்னமோ பாடகர்கள் நிறுத்தும்போது முழுப் பதத்தையும் கூற பயப்படுகிறார்கள்! அம்மாதிரியே “ஸுந்தரி” என்று நிறுத்துவதை “ஸுந்” என்றும், அப்பராம பக்தி என்பதை “அப்பரா” என்றும் பாடகர்கள் ஸர்வஸகஜமாக நிறுத்தி விடுகிறார்கள். ஸங்கீதத்தை அணுவணுவாய் சோதித்து அளந்து பார்க்கும் மஹாநாடுகள் இதைப்பற்றி கொஞ்சம் பரிசீலனை செய்யக்கூடாதா? சமயம் நேரட்டுமென்று காத்திருக்கிறாப் போலிருக்கிறது.

போனால் போகட்டும், இந்த சீர் திருத்தங்களை பழக்கத்துக்குக் கொண்டுவருவது யார் கடமை என்று சற்று யோசிக்கலாம். தொழிலாக ஸங்கீதத்தை அப்யஸிக்கும் பாடகர்களுக்

கோ இதைப்பற்றி தீவிரமாய் கவனிக்க முடியாது. ஏனெனில் அவர்கள் வரும்படியையல்லவோ முக்கியமாய்ப் பார்க்கவேண்டிவருகிறது! பணத்துக்கு வேண்டி அன்றன்று வெளியாகும் புதுப்பாட்டுகளைவிட்டு, தமக்குத் தெரிந்த பாட்டுகளை சீர்திருத்துவது இவர்களுக்கு லாபகரமானதன்று. இன்னும் எப்படி கேட்போரை திருப்தி செய்யலாம், ரேட்டை எப்படி அதிகப்படுத்தலாம், கொடுத்த ஸம்மானத்தில் அதிக பாகம் தமக்கு மிஞ்சும்படி என்ன வழி கண்டு பிடிக்கலாம், குறைந்த சார்ஜில் அதிக டியூஷன்கள் சம்பாதிப்பதின் சூக்ஷ்மம் என்ன என்று ஆராய்ச்சி செய்யும் பாடகர்களுக்கு இதைப்பற்றி மிகவும் கவலை இல்லை. அப்படி சிரத்தையோடு இவ்விஷயங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருபவர் மிகச் சிலரே இருக்கக் கூடும். மேற்சொன்னவைகளை ஆதரிக்கும் கடமை முதலாவதாக தொழிலல்லாத ஸங்கீத அப்யாஸிகளைச் சேர்ந்தது. உண்மையில் அவர்கள் ஸங்கீதத்தை ஊக்கத்தோடு கற்று பலர் அதில் நல்ல பாண்டித்தியமும் அடைந்திருக்கின்றனர். ஆனால், அவர்கள் தம்மை அடிக்கடி தொழிலாளிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்வதோடு நின்றுவிடுகின்றனர். அவர்களிடம் இருக்கும் குறைகளை தாம் விலக்கி தாம் பாடும்போது குற்றமறப் பாடவேண்டுமென்ற எண்ணம் அவர்கள் மனதில் உதிக்கவேண்டும். சென்ற மாதத்தில் ஒன்றிரு சபைகளில் தொழிலல்லாத ஸங்கீத வித்வான்களின் கச்சேரிகள் நடந்தன. அவைகள் மிகப் பெருமை பாராட்டத்தக்க விதமாகவே இருந்தன. ஆயினும் முடிக்குமிடங்களில் அரை பதங்களில் நிறுத்துவதும் அகார உகாராதிகளை சந்தர்ப்ப விரோதமாக உச்சரிப்பதும், பதங்களை நிறுத்தும்போது பொருளுக்கும் ராகபாவத்துக்கும் விரோதமாக நிறுத்துவதும் பெரும்பாலும் காணப்பட்டன. இவ்வம்சங்களில் தொழிலாளிகளும் தொழிலல்லாதவர்களும் இருவருமே குறை கூறத் தகுந்தவர்களாகிறார்கள். பணத்துக்கென்று ஸங்கீதத்தைக் கற்காமல், அதை கலையாகக் கற்று ஊக்கத்தோடு தேர்ச்சி பெற்றுவரும் இருபாலரும் தற்கால மேடைக் கச்சேரிகளில் காணும் ஊழல்களை தாமும் பின் தொடராது அவைகளை நீக்கி உயர்தர ஸங்கீதத்தை நம் நாட்டில் நிலைநிற்கச் செய்வார்களென்று நம்புகிறோம்!

தெலுங்கிலுள்ள அரிய ஸங்கீத நூல்கள்!

கர்னாடக ஸங்கீதத்தின் திறவு கோல்கள்!!

ஸம்பிரதாய ப்ரதர்சினி—ஸுப்பராம தீக்ஷிதர் இயற்றியது மூன்று வால்யூம்கள் ரூ. 10-0-0

தச்சூர் சிங்கராசாரி சகோதரர்களால் இயற்றப்பட்டவை :—

ஸ்வர மஞ்சரி ...	... 0—5—0	
காயக பாரிஜாதம் ...	... 1—4—0	
ஸங்கீதகளாநிதி ...	... 1—4—0	
காயக லோசனம் ...	... 5—0—0	செட் 15—0—0
காயக வித்தாஞ்சனம் பாகம் I	... 2—0—0	
ஷை II	... 3—0—0	
கானேந்து சேகரம்	... 3—8—0	
பகவத் ஸாரம்ருதம்	... 0—4—0	

மேற் கூறிய இருவரின் கிரந்தங்கள் தெலுங்கிலுள்ளவை. இவையே தென் இந்திய ஸங்கீதத்திற்கு ஆதார கிரந்தங்கள் எனக் கூறலாம். ஸங்கீத வித்வான்கள் போதகர்கள், மாணாக்கர்கள் முதலியவர் ஒவ்வொருவரின் வீட்டிலும் இப்புத்தகங்கள் இருக்கவேண்டிய தவசியம். புத்தகங்கள் மிக அரிய நூல்களானவையாலும், சில பிரதிகளே ஸ்டாக்கிலிருப்பதனாலும், வேண்டுவோர் முழுப்பணமுமனுப்பினால், உடன் தபாலில் அனுப்பி வைக்கப்படும். தபால் செலவை வி. பி. மூலம் வசூலிக்கலாகும்.

இப் புத்தகங்கள் வேறெந்த புத்தக ஷாப்பிலும் கிடைக்கமாட்டா.

ஸங்கீத அபிமானி ஆபீஸ், மைலாப்பூர், மதராஸ்.

புது வித்வான்களின் வெளியூர் பிரயாணம்

இவ்வத்தியாயத்தில் "புது வித்வான்கள்" என்னும் பதங்களை ஒரு பிரத்யேக பொருளோடு உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. "புது வித்வான்கள்" யார்? அவர்கள் வித்வான்களல்லர். ஆனால் "வித்வான்" என்னும் பெயரை அடைய ஆசைகொண்டவர்கள். எல்லாருக்கும் ராஜாக விருப்பம்தான் இருக்கிறது. பல்லக்கு ஏற ஆசைகொள்ளாதவர் யார்? ஆயினும் அதற்குத் தக்கயோக்யதை வேண்டாமா? அங்குதான் இப் புது வித்வான்கள் உண்மையை உணருவதில்லை. தங்கள் கிராமத்தில் ஏதோ ஒரு கற்றுக்குட்டி பாடகரிடம் ஸரளி, ஜண்டை வரிசைகளை 4 மாதம் பாடம் செய்துவிட்டு, அது முதல் கேட்டும், கேளாமலும், பொருள் உணர்ந்தும், உணராமலும், பாஷை தெரிந்தும் தெரியாமலும் வாயில் வந்தபடி உருப்படிகளில் சிலவற்றை பாடம் செய்துவிட்டு அதற்குத் தக்கபடி தம் ஊரில் மதிப்பாவது வருமானமாவது இல்லாதது கண்டு "அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை" போல வெளியூர் பிரயாணமாகிவிடுகிறார்கள். சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி முதலிய ஊர்களை உத்தேசித்து ரயிலேறுவதற்குமுன், மனதில் கட்டியிருக்கும் ஆகாசக் கோட்டை சாதாரணமா? அடடா, அதை வர்ணிக்கவும் சாத்தியமாகாது. அவர்கள் நிச்சயம் செய்துகொள்ளுவது என்னவென்றால்:—"பட்டணத்தில் 10 சபைகள் இருக்கின்றன. பெரிய கனவான்கள், பிரபுக்கள், மாதம் ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கும் உத்யோகஸ்தர்கள் இவர்கள் நிரம்பியிருக்கிறார்கள். போனவுடன் ஒரு காப்பி ஹோட்டலில் இறங்கி, இவர்கள் பெயர், விலாஸம் முதலியவைகளையும், சபா செக்ரிடரிகள் யாரென்பதையும் கண்டு தெரிந்துகொள்வது சுலபம். இவர்களில் சிலரை நேரில் பேட்டிகண்டால் நாம் இருக்கும் 10 தினங்களுள் 4 கச்சேரியாவது ஏற்பாடாகாமல் போகாது. குறைந்தது இருநூறு முன்னூறு ரூபாய்க்கு மோசமில்லை. இதை எடுத்துக்கொண்டு பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களுக்கு ஒரு பிடில்காரரையும், மிருதங்கக்காரரையும் அழைத்துக்கொண்டு சென்றால் அங்கேயும் பணம் கிட்டுவது மிக சுலபம். ஏனெனில் அவ்வூர்களில் தெற்கேயிருந்துவரும் வித்வான்களில் யார் கச்சேரியாயிருந்தாலும், டொனேஷனை (Donation) ஆளுக்கு 10 ரூ. 20 ரூ. போடுவார்களாமே! ஆகக் கூடி ஒரு ஆயிரமாவது குறைந்தது கிட்டாமற்போகாது. ஒருமாதத்தில் இதை சம்பாதித்துக் கொண்டுவந்தால் 1 வருஷம் கஷ்டமில்லாமல் உள்ளூரில்ஜீவனம் செய்யலாம். மறுவருஷம் இன்னொரு ட்ரிப் (Trip) புறப்பட்டால் போச்சு."

இதுதான் அநேகமாக வெளிப் புறப்படும் புது வித்வான்கள் யாவரும் கட்டும் கோட்டை. இதன் உண்மை எவ்வாறாகிறதென்று சற்றுக் கவனிப்போம். மேற்கூறிய பரமசாதுக்களுக்கு 'பட்டணவாசம் என்பது எப்படியிருக்குமென்று கொஞ்சம் கூட அனுபவமிராது. பட்டணத்திலுள்ளவர்களெல்லாம் வருஷத்துக்கு வருஷம் நூற்றுக் கணக்கான பாடகர்களையும் ஆயிரக்கணக்கான உருப்படிகளையும் கேட்டுக்கேட்டு அலுத்துப்போனவர்களென்று அவர்களுக்கு ஜோஸியமா தெரிந்திருக்கக் கூடும்? ஸபா ஸெக்ரிடரிகளிடம் சிபார்சு கொண்டுபோய் புது ஆஸாமி ஒருவர் கச்சேரி செய்து விடுவது சாத்யமான காரியமன்று. கஜகர்ணம் போட்டாலும் தாம்முன்னே கேழ்விப்படாத வித்வான்களை அவர்கள்சபாவில் கச்சேரி செய்யும்படி ஏற்பாடு செய்யமாட்டார்கள். ஸங்கீத அனுபவமாவது ஞானமாவது உள்ள ஸெக்ரிடரியாயிருப்பின் புதிதாக வந்த பாடகரை தம் வீட்டில் பாடச்செய்து தாமும் தம்முடைய சிநேகிதரும் கேட்டு பாட்டு சிறந்ததா என்று தீர்மானித்துக் கொள்ளுவார்கள். கேட்கக் கூடியதாயிருப்பின் தம் சபையில் ஒரு தேதியைக் குறித்து அன்று ஷை வித்வானின் இனும் கச்சேரி ஏற்பாடு செய்வார்கள். இதற்கு அடுத்தாப்போல பணக்கச்சேரி ஒன்று ஏற்பாடுசெய்து தருவதாக வாக்குதத்தம் செய்வார்கள். ஆனால் அந்தப் பணக்கச்சேரி இனும் கச்சேரி நடந்து குறைந்தது 6 மாதத்துக்குப் பிறகுதான் நடத்த யோசனை செய்யப்படும். இதற்குள் வித்வான் தம் ஊருக்குப்போய் நிலசாகுபடி, அறுவடை இதுகளை கவனித்துவிட்டு வரலாம். வீட்டில் பாடியதிலிருந்து பாட்டு எடுபடாதென்று நிச்சய மாகிவிட்டால், அப்புறம் அந்த செச்ரிடரியை லக்ஷார்ச்சனை செய்தாலும் பிரயோசனமில்லை. ஒவ்வொரு சபையிலும் இப்படித்தான் என்பதும் இந்த வெளியூர் சாதுகளுக்குப் புலப்படுவதில்லை.

சொந்த ஊரிலிருந்து இருபது ரூபாயோ முப்பது ரூபாயோ கடன் வாங்கி பட்டணம் போய் திரும்பி வந்தவுடன் கொடுத்துவிடுவதாக வாக்குறுதி கூறிவந்த இந்த வித்வான் பட்டணம் காபி ஹோட்டலில் ஒருமாதம் வரை தங்கியிருந்து பணத்தையும் செலவழித்து இனும் கச்சேரியும் ஒன்றும் நடத்தி, தம் பாட்டும் ஏடுபடாமல் திரும்பிப்போக ரயில்சார்ஜும் கையில் இல்லாமல் கஷ்டப்படுவது என்ன பரிதாபம்! பெரிய பட்டணங்களில் பாடி பணத்தை குமித்துவிடலாம் என்ற இவர்களின் யுக்தியைத் தான் நாம் என்னென்று கூறுவது?

நிற்க, கனவான்களையும், பிரபுக்களையும், உயர்ந்த சம்பளக்காரர்களையும் பேடி கண்டு கொள்வதையும், அதனால் உண்டாகும் நிஷ்பிரயோஜனத்தையும் இந்த வித்வான்கள் பிரயாணம் புறப்படுமுன் கேள்விப்பட்டாவது தெரிந்துகொண்டாவது இருந்தால் அவர்கள் பிரயாணமே புறப்படமாட்டார்கள். ஏனெனில் பட்டணத்தில் ஒரு பெரியவர் வீட்டுக்கு 1,000 நடை நடந்தால், அவரை ஒருதரம் சந்திக்கலாம். அந்த சந்திப்பிலிருந்து அந்த வீட்டுப் பணக்காரருக்கு ஸங்கீதத்தில் அவ்வளவு ஊக்கமில்லை யென்றும், அவரது சகாயத்தை நாடுவது வியர்த்தம் என்னும் உண்மை தெரியவரும். இந்த விசேஷ அனுபவத்தை அறிந்து கொள்ளுவதற்கே ரயில் சார்ஜு செலவழித்த வித்வானைப்பற்றி நாம் பரிதாபப் படாமல் என்ன செய்வது?

பட்டணத்தில் ஒரு சகாயம் மாத்திரம் கிட்டக்கூடும். அதாவது வரும் வித்வான்கள் முறையே மனுப்போட்டு மனம் சலிக்காமல் காத்திருந்து பரிக்ஷா கச்சேரியும் இனமாக நடத்தினால், 4 மாதத்திற்குப் பிறகு கார்ப்பொரேஷன் ரேடியோவில் ரூ 30-க்கு ஒரு கச்சேரி செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனால் இதில் பிடில்காரர், மிருதங்கக்காரர் இவர்களுக்கு சம்மானம்செய்து, வண்டிச்சத்தம், காபி சோடா, வெத்தலை பாக்கு சிலவு இவையாவும் போனது போக மீதி எவ்வளவு மிஞ்சும் என்பதை யோசித்தால் "இலவுகாத்த கிளியானேன்" என்ற தத்துவத்தை யறியலாம்.

தமிழ்நாட்டின் தலைநகராகிய சென்னையில் இந்தபாடு; கல்கத்தா, பம்பாய் முதலிய பெரிய பட்டணங்களிலோ சொல்ல வேண்டிய தில்லை. சென்ற சில வருஷங்களுக்கு முந்தி, தம் யோக்கியதையை உணராமல் இவ்விடங்களுக்குப் போய் கச்சேரி நடக்கவும் வழியில்லாமல், திண்டாடும் வித்வான்களுக்கு தனவந்தர்கள் டொனேஷன் (Donation) போட்டு வஸூல் செய்து திரும்பிபோக ரயில் சார்ஜும் தயார் செய்து கொடுத்தார்கள். இப்பொழுதோ அதுவும் நின்றுபோய்விட்டது. ஏனெனில் எவ்வளவுபேருக்கு இப்படி கொடுப்பது? மாதாமாதம் 50, 60, 100 பேர்கள் வந்துகொண்டேயிருந்தால் இது எவ்வாறு ஸாத்தியமாகும்? முன்னமேயே புறப்படுவது தெரிந்தால் வரவேண்டாமென்றுவது கடிதமெழுதியிருப்பார்கள். திடீரென்று வந்து சேர்ந்துவிட்டால் அவர்கள் என்னசெய்வது? நமக்காகவேண்டியது என்ன என்று பேசாமல் இருந்துவிடுவார்கள். இதில் தனவந்தர்களையும் அபிமானிகளையும் குறைகூற விடமில்லை. காலதேச வர்த்தமானங்களையாவது, தம் யோக்யதையையாவது உணராது வெளியூர் சென்றால் பணமூட்டை கட்டிக்கொண்டு வரலாம் என்ற மனக்கோட்டையுடன் தூரதேசத்துக்குப் புறப்படுவோர்மீது தப்பேயொழிய, ரஸிகர்மீது யாதும்குற்றமில்லை.

இது விஷயத்தில் கூறவேண்டிய விஷயம் ஒன்றேதான். அதாவது, இப்புது வித்வான்கள் வெளியூர் பிரயாணம் புறப்படுமுன், தம் யோக்யதையைத் தானேசற்று கவனிக்கவேண்டும். பட்டணங்களில் இருப்பவர்கள் எந்தப் பாட்டை எப்படி பாடினாலும் விரும்புவார்களென்றும், தாராளமாக பணத்தைக்கொடுத்து எல்லா ஸங்கீதத்தையும் கேழ்க்கவருவார்களென்றும் உள்ள மூட எண்ணத்தை ஒழிக்க வேண்டும். தமக்கு பூரண வித்தையும் தேர்ச்சியும் இருந்தாலன்றி வெளியூர் பிரயாணம் செய்வது அசம்பாவிதம். பிரபல வித்வான்கள் கல்கத்தா, பம்பாய், டெல்லி, ரங்கூன், சிங்கப்பூர், பினங் எங்கு சென்றாலும் அவர்களுக்கு ஆயிரக் கணக்காக வசூலாகிறது. மரியாதையிலும் குறைவில்லை. நாடோடி வித்வானுக்கோ பட்டணத்தில் ஒரு மாதம் தங்கினாலும் ஒரு கச்சேரியும் கிடைக்காமல், திரும்பிப்போக ரயில் சார்ஜுக்கே திண்டாட்டமாகி விடுகிறது. இது ஏன்? உயர்தர சங்கீதத்தை யாரும் விரும்புவார்கள். அதற்கு உள்ளூர், வெளியூர் எல்லாவிடங்களிலும் ஆதரவு உண்டு. இதை இங்கு கூறவேண்டிய அவசியமென்னவெனில், சென்ற சிலமாதங்களாக, பல புதிய பாடகர்கள் சென்னைக்கும் மற்றுமுள்ள நகரங்களுக்கும் வந்து கொண்டே யிருக்கிறார்கள். அவர்களில் பலரை சில பிரமுகர்கள் வீட்டில் பரிக்ஷார்த்த

மாக பாடி கே[illegible]ட்க நேர்ந்தது. 100-ல் 75-க்கு ச்ருதி, தாளம், பாவம், ஸாஹித்யம் ஏதும் சரியில்லை. இவ்வளவு குறைகளை வைத்துக் கொண்டு பட்டணத்தில் "கச்சேரி" செய்யத் துணிந்து வந்திருப்பதைக் கேட்டால் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. யதார்த்த வாதியான ஒருவர் இவர்களுக்கு "நீங்கள் இவ்வூரில் தங்கினால் உங்களுக்கு படிச்செலவாகுமே தவிற வரும்படி ஒன்றும் கனவிலும் கிடைக்காது. உடனே திரும்பி உங்கள் ஊர் செல்வதே உத்தமம்" என்று புத்திமதி கூறியனுப்புவார்.

பட்டணத்தை நாடிவரும் புது வித்வான்களே! பட்டணத்தில் லகுவில் கச்சேரியாவது பணமாவது கிடைக்குமென்று ஏமாற வேண்டாம்! உங்கள் ஊர் உங்களுக்கு 50 ரூபாய் கொடுக்குமானால் பட்டணம் இன்னும் 100 கூட கொடுக்கும். ஆனால் உங்கள் ஊரில் ஆதரவளிக்கக்கூடிய பெருமையாவது வித்தையாவது உங்களிட மில்லையானால், பட்டணமும் உங்களை நிராகரிக்கத்தான் செய்யும். "உள்ளூரில் விலையாகாத மாடு வெளியூரில்விலையாகாது" என்று பழமொழி யுண்டு. அதைப்போல, ஸங்கீதத்தை முறையே கீடித்த காலம் ச்ருதி, லய பாவ நிர்ணயங்களோடு அப்யாசம் செய்து தேற்சி பெற்றாலொழிய வெளியூர் பிரயாணத்தினால் உங்களுக்கு யாதொரு பிரயோசனமாவது லாபமாவது கிடைக்காது. இதை மனதில் உறுதியாக வைத்துக் கொள்ளுங்கள்! வெளி ஊர் பிரயாணம் ஸம்பாத்திய விஷயமாக புறப்படுவதற்கு முன் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டு விடைகளை தீர்மானித்துக்கொள்வது நலம்:—நான் வெளியூர் பிரயாண மாக வேண்டும். என்? உள்ளூரில் நமது சங்கீதத்துக்கு ஆதரவு இல்லை. எதனால்? உங்களூரில் ஸங்கீத அபிமானிகள் இல்லையா? அல்லது அபிமானிகள் ஆதரிக்கக்கூடிய உயர்தர சங்கீதப் பயிற்சி உங்களிடம் காணப்பட வில்லையா? வெளியூரில் நாம் எவ்விதமான ஆதரவை ஜனங்களிடம் எதிர் பார்க்கிறோம்? அவ்விதமான ஆதரவு இவ்வூரில் சிலரிடமாவது ஏன் எதிர் பார்க்கக்கூடாது? நீங்களிருக்கும் சிறு ஊரில் ஸங்கீதத்தை ஆதரிக்கும் அபிமானிகள் இல்லாம லிருப்பின் அவர்கள் நிறைந்துள்ள ஊர்களுக்குத் தாராளமாகச் செல்லுங்கள். உங்களுக்கு ஆதாவும் வருமானமும் விசேஷமாகக் கிடைக்கும். ஆனால் எவ்வூரிலும் ஸங்கீதத்தை ஆதரிக்கும் ஒன்றிருவராவது இல்லாமலிருக்க மாட்டார்கள் என்பது நமது கொள்கை. கிரமமான அப்யாஸம் என்பதே யில்லாத பலர் பட்டணத்தின் பணத்தில் நம்பிக்கை வத்து ரயில் சார்ஜு செலவு செய்து வந்தவுடன் ஏமாந்து தவிக்கிறார்களே அது பரிதாபமாகவிருக்கிறது. ஒவ்வொரு ஊரிலும் ஸங்கீதக் கலையை அபிவிர்த்தி செய்வதற்கென்றே சில வித்வான்களும், போதகர்களும், பாலர் பாலிகைகளும் இருப்பது இயற்கையாதலால் அதற்கு விரோதமாக, கச்சேரிசெய்ய ஆசைப்பட்டு அதற்குத் தக்க யோக்யதையற்று, தமமிருப்பிடத்தையும் விட்டு பட்டணத்தில் வந்து காலம் கழிப்பது நன்றன்று. பெரிய வித்வான்களின் செல்வாக்கும் பெயரும் தமக்கும் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படும் ஒவ்வொரு புது வித்வானும், ஸங்கீத வித்தையை முறையே நன்கு பயின்று அதில் நல்ல பாண்டித்யம் அடைவதோடு, கேட்போரை ரஸிக்கும்படி செய்வதற்குள்ள ரஹஸியத்தையும் அறிந்து தம் பாட்டை அதற்குத் தக்கவாறு சீர்திருத்திக் கொள்ளவேண்டும். புதிதாக வரும் பாடகர்கள் பட்டணங்களுக்கு விஜயம் செய்து அதனால் அடையும் பல கஷ்ட நிஷ்டூரங்களையும் நன்கு தெரிந்துகொண்டு, அதன்படி நடப்பார்களென்று நம்புகிறோம்.

The "**Sangeetha Abhimani**" is the best Medium for Advertising your Musical, Art, Fancy and Toilet Wares.

For Contract rates apply to:—

The Manager,
'Sangeetha Abhimani'
Mylapore, Madras.

ரேடியோ ஸங்கீதம்

ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி திங்கட்கிழமை மாலை 5-30 முதல் 7-30 மணிவரை, மதராஸ் கார்ப்பொரேஷன் ரேடியோவில் "ஸங்கீத அபிமானி" பத்திராதிபர் வைத்திநாதஸ்வாமி B.A.L.T. G.D.A. அவர்களால் தக்க பக்க வாத்யங்களுடன் பாட்டுக்கச்சேரி நடைபெறும்.

ஹரிகதையில் தமிழ் உருப்படிகள்.

புராண சம்மந்தமான சரித்திரங்களை காலக்ஷேபங்களாக நடத்தும்போது எவை எவைகளில் தமிழ் பாட்டுகள் பொருத்தமானவை, எவைகளில் வடமொழியே பிரதானமாக வழங்கவேண்டும் தெலுங்கு எந்த கதைகளுக்கு பொருத்தமானது என்பதை அறிய புத்தகம் ஒன்றுமில்லை. ஆயினும் பாகவதர் பழக்கத்தினால் இதை தெரிந்துகொள்ள வேண்டியதவசியம். இந்த பழக்கம் விசேஷமாக இருக்க வேண்டும் என்பதை ஒட்டியே தான் கதை செய்யும் பாகவதர் முதிர்ந்தோராக இருந்தால் மேன்மை அன்று முன்னோரிதழில் கூறினோம். ஆனால் தற்காலத்தில் பாகவதர்களுக்கு எவ்வளவு வயது குறைவா யிருக்கிறதோ அதைப் பொறுத்தே விசேஷ கீர்த்தி இருக்கிறதென்றதை முன்னிட்டு இவ்விஷயத்தைப் பற்றிச் சற்று விரிவாக கூற நேரிடுகிறது.

உதாரணமாக, ராமாயண காலக்ஷேபங்களில் வட மொழியே பிரதான பாஷை; ஏனெனில் ஆதார கிரந்தமான "வால்மீகி ராமாயணம்" ஸம்ஸ்க்ருதத்திலே யுள்ளதாலும், கலியுகத்துக்கு முன்னால் நடந்த இச்சரித்திர காலத்தில் வட இந்தியாவில் ஸம்ஸ்க்ருதமே தாய் பாஷையாக வழங்கி வந்ததினாலும், ராமாயணம் நடத்தும்போது வால்மீகி சுலோகங்களை சொல்லி விசேஷ வியாக்யானம் தமிழில் செய்வது பூர்வாசாரியார்கள் ஸம்பிரதாயம். பிறகு தெலுங்கிலுள்ள தியாகராஜ உருப்படிகள் பெரும்பாலும் ராமனைப்பற்றிய வாதலால், ராமாயண சரித்திரத்துக்கே இவை பொருத்தமானவை என்று சந்தர்பத்துக்குத் தக்கவாறு இவைகளையும் பாடி அவற்றிற்குப் பத அர்த்தமும் சொல்லி வந்தனர். தமிழ் தேசத்தில் தெலுங்கு பலருக்கு தெரியாததலால் தெலுங்கு கீர்த்தனங்களுக்கு தமிழில் அர்த்தம் சொல்ல வேண்டியதவசியமாயிற்று. வரவர ராமாயணத்திற்கு தமிழ் நாட்டிலுள்ள 'கம்ப ராமாயணம்', அருணாசலக் கவியின் "ராமாயண கீர்த்தனைகள்" இவைகளும் ஆதார கிரந்தங்களாகக் கொள்ளப்பட்டு முறையே காலக்ஷேபங்களில் உபயோகிக்கப்பட்டு வந்தன. வால்மீகி ராமாயண சுலோகங்களை வியாக்யானம் செய்ய மிகுந்த வட மொழி பாண்டித்யம் வேண்டுவது போல, கம்ப ராமாயண பாசுரங்களை மொழிபெயர்த்துச் சொல்ல நல்ல தமிழ் பயிற்சி வேண்டியதாயிருந்தது. ராமாயண ஸீரீஸ் நடத்தும்போது காலம் சென்ற கும்பகோணம் பஞ்சாபகேச சாஸ்திரியார் வால்மீகி ராமாயண ச்லோகங்களையே சிரமாரியாய் பொழிவார். அவைகளை பலமாதிரி அர்த்தங்களோடு வியாக்யானம் செய்வதில் அவர் நிபுணர். ஆனால் கம்ப ராமாயண பாசுரங்களை தம் கதைகளில் அவர் விசேஷமாக உபயோகித்து வந்ததாக நமக்குத் தெரியவில்லை. தற்காலம் சென்னையில் பிரபல பாகவதராக விளங்கும் ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் சடகோபாசாரியாரோ தம் ராமாயண காலக்ஷேபங்களில் கம்ப ராமாயண பாசுரங்களை அபிரிமிதமாக உபயோகித்து வருகிறார். இவைகளை மொழிபெயர்த்து சொல்லுவதில் அவர் மிகுந்த பாண்டித்ய முள்ளவர். இவர் சாஸ்திரியாரைப்போல் வட மொழியை பெரும்பாலும் உபயோகிக்கக்காணோம். இதிலிருந்து ஒவ்வொரு பாஷையிலும் மிகுந்த பாண்டித்யம் அத்தியாவசியம் என்று விளங்கவில்லையா? ஆனால் வட மொழியை உபயோகிப்பதே ராமாயண சரித்திரத்தை ஸம்பந்தப்பட்ட வரையில் இயற்கை. ராமாயணத்தை நாம் கேட்கும்போது ராமர் காலத்திலேயே நாமும் அவருடன் வசிப்பதாக ஒரு உணர்ச்சி ஏற்படவில்லையா? காலக்ஷேபத்தைப்பற்றிக் கூறும்போது சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகள் எங்கெங்கே எப்பொழுது நடந்தனவோ அவைகளை அதே மாதிரி வியாக்யானம் செய்து காட்டுவது இயல்பென்பது நம்முடைய அபிப்ராயம்,

இது இப்படியிருக்க ஒன்றிரு பிரபல பாகவதர்களைத் தவிர மற்றோர் தற்காலத்தில் ராமாயண ஸீரீஸ் நடத்துவதைக்காணோம். எல்லாரும் இந்த கடமையை ஒப்புக்கொண்டு "நான் தான் நீ தான்" என்று முன் வராத வரையில் நன்று. ஏனெனில், தற்கால இளம் மேதாவிகள் இவ் வேலையை தாம் தாங்கி முன்வந்து விட்டால் ராமாயண சரித்திரமே வேறு உருவாக மாறிவிட்டாலும் மாறிவிடக்கூடும். ஏனெனில் கோபாலகிருஷ்ண பாரதியின் "நந்தன் சரித்திரம்" ஒரு புறமிருக்க, தற்காலம் "பக்த நந்தனில்" வேதியன் நந்தனை மரத்தில் கட்டிவைத்து சவுக்கால் அடிக்கவில்லையா? அதேமாதிரி சீதை லங்கைக்குச் செல்லாமல் "அந்தமான்" அல்லது மற்ற வேறு எந்த த்வீபத்துக்காவது தூக்கிச் செல்லப்பட்டா

னும் படலாம். ராவணன் ராக்ஷஸனுயிருப்பதை விட்டு யக்ஷன், கந்தர்வன், பூதம், பைசாசம் வேறு எந்த ரூபத்தை எடுத்துக்கொண்டாலும் கொள்ளலாம். இதற்கெல்லாம் காரணம் எது? ஆதாரகிரந்தங்களை சரிவர படிக்காமல் கதை செய்ய முன்வருவதுதான். போனால் போகட்டும். ராமாயணத்தைப்பற்றி நமக்கு ரொம்ப கவலை வேண்டாம். சம்பூர்ண ராமாயண காலக்ஷேபம் இன்னும் நம் நாட்டுப் பால்ய பாகவதர்கள் கையில் அகப்படவில்லை.

நிற்க, தற்கால கதைகளில் இந்தவடமொழி தெலுங்கு முதலிய நிரூபணங்கள் மலையேறிப் போய்விட்டன. கபீர்தாஸ், ராமதாஸ் முதலிய சரித்திரங்களுக்கு சம்மந்தப்பட்ட ஆர்ய, ஸாகி தண்டி முதலியவைகளெல்லாம் போய் கதைகளுக்குத் தகுந்தபடி தமிழ்பாட்டுக்கள், போடப்பட்டு அவைகளே ஸகஜமாக வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மார்க்கம் மிக லகுவானதென்று சொல்லாமலே விளங்கும். ஏனெனில் கர்னடக நிரூபணத்துக்குச் சம்மந்தப்பட்ட பாட்டுக்களைக் கற்பதென்றால் முதிர்ந்த சிலரிடம் சென்று வெகுநாளிருந்து பொருளும் நிறைய செலவழித்தாலொழிய அவைகளைக் கற்க சாத்யமாகாது. மேலும் மேற்படிபாட்டுக்களை பயின்றாலும், அவைகளை மொழிபயிர்க்கும் ஸாமர்த்தியம் வேண்டாமா? ருக்மணி கல்யாணத்தில் "ச்ருத்வாகுணன் புவனஸுந்தர" என்ற சுலோகத்தை பைரவியில் பாடி அதன் ஒவ்வொரு பதத்தின் விசேஷ அர்த்தமும் 'ச்ருத்வா' என்ற பதம் முதலில் என்வர வேண்டுமென்ற வியாக்யானமும் சொல்லி பிரும்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரியாரிடம் கேட்ட யாரும் கண்ணால் நீர் சொரிந்திராமலிருக்கமாட்டார்கள். வியாக்யான மஹிமை எளிதில் வரக்கூடியதன்று. அது "கட்டிக் கொடுத்த சாதம்" அல்ல. இந்தக் கஷ்டமெல்லாம் யாருக்கு வேண்டும் என்றெண்ணியோ என்னமோ, தற்கால பாகவதர்கள் ஒருடிராமா பாட்டு எழுதுகிறவரைக் கூப்பிட்டு தாம் பண்ணப்போகும் கதையை சுருக்கமாகச் சொல்லி அதற்கு சம்பந்தமான 10 பாட்டுக்கள் லகுவான ராக தாளத்தில் போட்டுக் கொடுக்கச் சொல்லிவிட்டால் கார்ய சாத்யமாகிவிட்டது. இந்தப் பாட்டுக்கள் எந்தக் கதைக்கு வேண்டுமானாலும் தமிழிலேயே போடப்பட்டு விடுவதனால் பாடம்செய்ய சுலபமாயிற்று. பாட்டு எழுதிக் கொடுத்த பாடகரே ஒவ்வொரு கதையிலும் தாம் விஜயம் செய்வதனால் பாகவதருக்கு மனோதைரியம் குன்ற நியாயமில்லை. இந்தப் பாட்டுக்களோ, கம்பராமாயணம் திருப்புகழ் நாலாயிரப்பிரபந்தம் முதலியவைகளைப்போலல்லாமல் மிக எளியதமிழில் விருப்பதனால் கேட்போருக்கு வியாக்யான மில்லாமலே பொருளறியக் கூடியவையா யிருக்கின்றன. பூர்வ பீடிகை முடிந்ததும், கதையை படிப்படியாக சொல்லிக்கொண்டு மத்தியில் மத்தியில் பாட்டுக்களைப் போட்டு, "இப்படி பேசிக் கொண்டார்கள், இப்படி ஸ்தோத்திரம் செய்தாள், இதுமாதிரி நிகழ்ந்தது" என்று மேலே கூறி முடித்து விடுவதுதான் புதுநாளைய ஸம்பிரதாயம். தற்காலத்தில் பாடும் தமிழ்ப் பாட்டுக்களே கதைத் தொடர்ச்சியின் பாகங்களாகின்றன. வடமொழி, தெலுங்காயிருந்தால், பாட்டைப்பாடி "இதில் கூறியபடி" என்று சொல்லி மேலே செல்ல முடியுமா? பதம்பதமாக அர்த்தமல்லவோ சொல்லவேண்டும்? அதற்கு வீண் காலப்போக்கும் பரிசிரமும் ஏற்படக் கூடுமல்லவா?

ஆனால் இப்படிப் பாடும் தமிழ் பாட்டுகளுக்கு வியாக்யான மின்றிமேலே கதையைத் தொடர்ந்து செல்வது, தனக்கு பாட்டுக்கு வியாக்யான்ம் செய்ய தெரியாமையினாலா, அல்லது வீண் பத அர்த்தத்தை தற்காலத்தில் யார் கவனிக்கிறார்கள் என்று எண்ணியா அல்லது காலப் போக்கு என்று நினைத்தா, அல்லது எந்த காரணத்தினால் என்று நம்மால் கூறமுடியாது. இருந்தாலும், ஒன்று கூற வேண்டியிருக்கிறது. என்னவெனில், இப்பாட்டுக்கள் கதையின் இயற்கைக்கு விரோதமாக இருப்பதுதான் நாம் துக்கிக்கத்தக்க விஷயமாயிருக்கிறது. "ராமதாஸ்" சரித்திரத்தில் ராமதாஸர் தமிழில் பிரார்த்திக்கிறார். தானிஷா பாச்சா சேவகர்களுக்கு தெலுங்கில் ஆர்டர் போடுகிறான். டெல்லி நவாபு பாச்சாவுக்கு தமிழில் செய்தி சொல்லி யனுப்புகிறான். இது ஒவ்வொன்றும் பத்ராசலத்தில் நடந்த ராமதாஸ் சரித்திரத்தில் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது என்று சற்று யோசித்துப் பார்ப்போமானால் நமக்கு வியப்பாகத்தான் தோன்றக்கூடும். மதுரைமா நகரில் நிகழ்ந்த கௌரீ சரித்திரத்தில் "சிவதீக்ஷாபரு" என்ற தெலுங்கு பதம் பாடப்படுகிறது. இந்த விபரீதங்கள் புராண சரித்திரங்களில் நடக்கவேயில்லை. ஹரி கதைகளில் 20-ம் நூற்றாண்டில்தான் நடக்கிறது. தமிழ் பாட்டுக்கள் வேண்டியது பாடட்டும். நாம் வேண்டாமென்று சொல்லவில்லை.

ஆனால் ராமதாஸரும் கபீர்தாஸரும் ஈசுவரப் பிரார்த்தனை செய்யும்போது அருணாசலக்கவி ராமாயண கீர்த்தனையும், திருப்புகழும் பாட வேண்டாம். வட இந்தியாவில் அரசாண்ட தாகச் சொல்லப்படும் மகமதிய சக்ரவர்த்திதம் சேவகர்களுக்கு தமிழில் ஏவல் கூறவேண் டாம். இந்த அசந்தர்ப்பங்களை நீக்க மிகுந்த கல்வியாவது தேர்ச்சியாவது அவசியமல்லவே! ஹரிகதை யென்பது பாட்டுக் கச்சேரியல்ல. கதையில் நிரூபணமே பிரதானம். வியாக்யானம் அதில் முக்யமான அம்சம். வடமொழி, தெலுங்கு, தமிழ் எந்தப்பாட்டாக இருந்தாலும் சரி, அதன் பொருள் கூறப்படுவது ஹரி கதையில அத்யாவசியம். பொருள் கூறாமல் கச்சேரிபோல் மென்மேலும் கீர்த்தனைகளை பாடிக்கொண்டு போவது காலக்ஷேபமென்று கருதி அதைக் கேட்கவந்த ஜனங்களுக்கு மிக்க அருவருப்பைத் தரும். கதையும் பேச்சும் சேர்ந்து 10 நிமிஷம், பாட்டுகள் பாடப்பட்டது 2 மணி 50 நிமிஷம் என்றால் இப்படிப்பட்ட ஹரி கதையில் யாருக்குத்தான் விரஸமுண்டாகாது ?

ஆனால் இப்படிப்பட்டவர்களை ஏன் அபிமானிகள் ஆதரிக்கவேண்டும்? ஏன் கிரமப்படி காலக்ஷேபம் செய்வோர்களையே தேர்ந்தெடுத்து ஆதரிக்கக் கூடாது? இந்தக் கேள்விகளுக்குத்தான் பதிலளிப்பது பிரையாசை. தெரிந்தவர் யாராவது "......மிக நன்றாக கதை செய்கிறார், வைத்துக் கேட்டால் அதன் அருமை தெரியும்" என்று சொல்லிவிட்டால் போதும். மறுவாரம் ....ஷி பாகவதரின் கதை ஏற்பாடாய்விட்டது. கேட்போரெல்லாரும் உண்மையாக கதைகேட்கவா வந்திருக்கிறார்கள் ? சிலர் சாயங்கால போதை எப்படி போக்குவதென்று தெரியாமலும், அநேகர் "யாரோ யேதோ ஒரு கதைசெய்யப் போகிறாராம் கேட்டுத்தான் வரலாமே," என்றும், இன்னும் அநேகர் "யாரோ புது பாகவதராமய்யா, அவசியம் கேட்கவேண்டு"மென்றும், மற்றும் ஒன்றிருவர் "குறைந்த ரேட்டுக் கதையை விடாவது" என்றும், சில உண்மை ரஸிகர்கள் "லேடி பாகவதர் கதையாம், நீர் வராமல்போனால் போம், நான் போகிறேன்" என்றும் கூறி கொட்டகையில் நிரம்பிவிடுகிறார்கள் ! இதில் கதையாவது, ரஸமாவது, ஆதரிப்பாவது! காலக்ஷேபங்கள் குறைந்தும், காலக்ஷேபிகள் அதிகரித்தும் வருவதற்கு வேறுகாரணமும் வேண்டுமா?

நேயர்களுக்கு அறிவிப்பு.

1. S. மாசிலாமணிப் பிள்ளை, நியூஸ் ஏஜெண்டு, தெப்பக்குளம், திருச்சினாப்பள்ளி. திருச்சினாப்பள்ளிக்கும், சுற்று வட்டங்களுக்கும்.
2. நாகப்பட்டணம் நியூஸ் ஏஜென்ஸி, பெரியகடைத் தெரு, நாகப்பட்டணம், நாகப்பட்டணத்திற்கும், சுற்று வட்டங்களுக்கும்.
3. M. கல்யாண சுந்தர முதலியார், நியூஸ் ஏஜெண்டு, கதர் ஸ்டோர், மாயவரம், மாயவரத்துக்கும் சுற்று வட்டங்களுக்கும்.

"ஸங்கீத அபிமானிக்கு" ஸோல் விற்பனை ஏஜெண்டுகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பிரதிகள் அவர்களிடம் கிடைப்பதுடன். விளம்பரவிவரங்களும், அவர்களிடம் தெரிந்து கொள்ளலாம்.

கீழ்கண்டவர்கள் நமது ஏஜென்ஸீயிலிருந்து ஆகஸ்டுமாத முதல் நீக்கப்பட்டு விட்டார்கள்.

1. T. S. அப்பாஜி ராவ், 24, பண்டிட் நிவாஸ், போர்ச்சுகீஸ் சரச் வீதி, தாதர். [பம்பாய் ஏஜெண்டு]
2. M. சிதம்பர தேசிகர், சிவன்கோவில் தெரு, காரைக்குடி, [காரைக்குடி ஏஜெண்டு]

இவ்விடங்களிலிருந்து பிரதிகள் தேவையுள்ளவர்களும், விளம்பரம் செய்ய விரும்புவோர்களும், நேராக நமது மைலாப்பூர் தலைமை ஆபீசுக்கு எழுதி பத்திரிகைகளும், விவரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர் : **ஸங்கீத அபிமானி ஆபீஸ்**, மைலாப்பூர், மதராஸ்.

கீர்த்தனைப் பகுதி

(காபிரைட்)

ராமநாதபுரம் ஸ்ரீனிவாஸ அய்யங்கார் கீர்த்தனை

மேளம் 28

ராகம்—கேதார கௌள—ஆதி தாளம்.

ஹரிகாம்போதி ||

ஆரோஹணம்:—ஸரிமபநிஸ

அவரோஹணம்—ஸநிதபமகரிஸ ||

ஸ்வர சக்ரம்

ஸப்த ஸ்வரங்களின் நீ

ஸ		ரி		க	ம		ப		த		நி
ஸ		ரி		க	ம		ப		த		நி
1	2	3	4	5	6	7	8	9	10	11	12

12 ஸ்வர ஸ்தானங்களின் நீ

I ஸாஹித்யம்

பல்லவி ||

ஸரகுன பாலிம்ப ஸமயமுரா நீகு
ஸரி யெவருன்னுருரா ஸரஸிஜநேத்ர || ஸரகுன ||

அனுபல்லவி ||

வரகுண சேஷாத்ரி வரத வெங்கடேச்வரா
வனஜஸம்பவ னுத வரமு லொஸகி நன்னு

[சிட்டை ஸ்வரம்]

,, மா, பநித பாதம பமகரி	மகரிஸா நிதப	மபநிஸ ரீ,ரி
ஸரிமாகரி மகரீகஸ ரிமபநி	தாபதபம்க்ரி	ஸ்ரிமமபா, நி
தபமாகரி மபநீதப மபநிஸ்	ரிஸ்ரி ஸ்ாநிதப	மபநி நிஸ்ா, ரி
ஸ்ரிம்ாக்ரி ம்க்ரீக்ரி ஸ்ரிஸநி	தபமபநி ஸரிஸ	, நிதபதபாம
கரி [ஸரகுன]

சரணம் ||

சதத்ருதி பூஜித கஜராஜுடு மொரலிடகா னனுக் ரஹிஞ்சலேதா அதி
வெத செந்தின பரமபக்துடனு ப்ரஹ்லாதுனி முனுநீ ப்ரோவலேதா மன்
மத ஜனக மர்ஷமுன நிகேதன மஹனீய ஸ்ரீனிவாஸ நீது ஸத்
கதலனு வினி நின்னுவேடிதினி மனஸு கருகி நீவு நாது ஸங்கட முதீர்ச்சி
[ஸரகுன]

II ஸ்வர ஸாஹித்யம்

[தட்டு 1-க்கு 4 களை வீதம்]

பல்லவி ||

| ,, மபா | தபா | பாதப | மகரீ ,, | ரிகாரி | ஸா | ,, நிஸா | ரிஸா | ஸநிதப | நிஸரீ |
| ஸ ர | கு ன | பா | | வி | ம்ப | ஸ ம | ய மு | ரா | நீ கு |

2. ,, பமபா,, த பா நிததப மககரி ரிகாரி ஸா | ,, ஸநிஸா,, ரிஸா | ஸாரிஸ நிதபா,, மபநிஸரீ,,
ஸர குண பா லி ம்ப | ஸ ம ய மு | ரா நீ கு

3. ,, ,, ,, ,, | ,, ஸநிஸமகா ரிஸா | ஸநிஸரீ ஸநித தபாமப நிஸரி
,, ,, ,, ,, | ஸ ம ய மு | ர நீ கு

,,, ரீமக ஸா,, ஸா மா , ப நீ , ரிஸ்ா | ,, ஸ்ாஸ்ா ,, ரிஸநிதபா | பமபா நிதபா தபமா மகரிம
ஸரி யெ வ ரு ன் ஞ ரு ரா | ஸ ர வி ஜ | நே த்ர

2. காரீ ,, ,, ,, ,, | ,, ,, | ரிமபநிஸ்ரீ, ரிஸஸ்நிநிதபத
அ ,, ,, ,, | ,, ,, | நே த்ர

3. மககரி ,, ,, ,, ஸ்ரிம் | ,, க்ரிஸ்ா,, ரிஸ்நிதபா | மாபநிஸ்ரிஸ்ாநித பதபாமக
அ ,, ,, ரு ரா | ஸ ர வி ஜ | நே த்ர

ரிமகரி ,, ,, ,, | ,, ,,
அ ,, ,, ,, | ,, ,,

[‘ஸ்ரகுண பாவிம்ப ஸ்மயமுரா’ என்று நிறுத்தவும்]

அனுபல்லவி ||

,,, ஸஸஸ ஸா பநிஸரீ,,, ரீரீ | ,, ரீ ரிக்ாரி ஸ்ா ஸ்ா,, | ஸ்ா ஸநிரிஸ் நி த பா
வர கு ண சே ஷாத்ரீ | வ ர த வெங் | க டே ச் வ ரா

,,, ரிபமக ஸஸா மபநிஸ்ரிக்ரீ ரீரீ | ,, ரீ ப்ம்க்ா ம்க்ாரி ஸ்ா | ஸ்ா பநிஸ்ரீஸ் நி த ப
வ ர கு ண சே ஷாத்ரீ | வ ர த வெங் | க டே ச் வ ரா

,,, மபரிஸ்ா ஸநிநித தபபா | ,,, மபப ஸ்நிதா | நிதபா பமகா , ரிரிரி
வனஜஸம் ப வ நு த | வர மு லொ | ஸ கி

[சிட்டை ஸ்வரம்] || ஸரகுண ||

சரணம் ||

ரிரிரிரி ரீரிரி ரிபமக ரீகாரிஸஸா	ஸரிகஸ ஸாரிஸநிதபா	நீஸாரிகாரி ரீ ரிம
சதத்ருதி பூஜித ஜராக ஜாடுமொர	விடக னனு க்ர	ஹிம்சலே தா அதி
பாநித பா பப பமம மாகரிரி ரி	ரீகாரிஸஸா நீஸாரிகாரி	ரி மபா பா பா
வெ த செ ந்தின பரம பக்துடகு ப்ரஹ்	லா துனி முனு ணி	ப்ரோவலே தா மன்
மகரிமப நீஸ்ரிஸ் ஸ்நிதா,, ப ப ம	பஸ்நித பாப பா	தபமக ரீ , ரி மப
மதஜனக மர்ஷமுன நிகே த ன ம	ஹனிய ஸ்ரீனி வா	ஸ நீ து ஸத்
நிஸ் ரிரி ரிரி ரிரி ரீம்க் ரிஸ்ஸ் நிநிநி	நி ஸ் ரி ஸா ஸ் நீ	த பாபமக ரீ
கத லனு வினி நின்னு வே டிதினி மனஸா	க ரு கி நீ வு ரா	து ஸ ங் கடமு தீர்

ரிரி || ஸரகுன ||
ச்சி

III. ராக லக்ஷணக் குறிப்புகள் :—கேதார கௌளம் ஆரோஹணத்தில் 'க', 'த' இரண்டு ஸ்வரங்களையும் வர்ஜியமாகக் கொண்டது. சதுச்ருதி ரிஷபமும், கைசிகி நிஷாதமும் ராகச்சாயா ஸ்வரங்கள். ரி, ம, நி, இந்த ஸ்வரங்களை மிகுந்த கமகமாகப் பிடிக்கவேண்டும். அவரோஹணத்தில் மகஸ என்று ரிஷபவர்ஜியமான பிரயோகம் ராகத்துக்கு ரஞ்சனையைக் கொடுக்கும். 'ரீ' என்று விச்ராந்தியாக நிற்கும் போது 'ரிகரீ' என்றும் 'ரிமகரி' என்றுமே பிரயோகிக்க வேண்டும். நிஸரிகரிஸா என்று வரும்போது காந்தாரம் பெரும்பாலும் சாதார காந்தாரம் என்று தோன்று மாதிரியே வழங்கப்படுகிறது. மற்ற ஸஞ்சார கிரமங்களைப் பற்றிய விவரங்கள் நம்முடைய 1935 வருஷ பிப்ரவரி மாத இதழில் ஏற்கனவே வெளியாகி யிருக்கிறது.

IV. பாவ விசேஷம் :—தன்னைக் கருணையோடு காப்பாற்ற தருந்த சமயமென்றும், வெங்கடேசனுக்கு நிகரில்லை யென்றும், தாம் கஜேந்திரன், பிரஹ்லாதன் இவர்களைக் காப்பாற்றி அனுக்கிரகித்தது போல், தம் குணாதிசயங்களையும் பெருமைகளையும் கேட்டு தம்மை அண்டிவந்த பக்தனுடைய ஸங்கடத்தைத் தீர்த்து ரக்ஷிக்கவேண்டுமென்று பொருளாகும்.

V. பாடும் முறை :—ஆதி தாளம் சவுக்க கால நடை, பல்லவி அரையிடம் எடுப்பு. அனுபல்லவியை முக்காலிடத்திலும் சரணத்தை ஸமனிலும் எடுத்து பாடவேண்டும். பல்லவியின் பின் பாதியின் ஸங்கதிகளை பாடி வரும்போது திரும்ப முதல் பாதியையும் ஒவ்வொரு தடவையும் சேர்த்துக் கொண்டே பாடவேண்டும். பல்லவி ஆரம்பமும், மன்மத ஜனக என்னுமிடமும் கல்பனா ஸ்வரம் பாட தகுதியான விடங்கள். இதன் சிட்டை ஸ்வரம் ராக பாவம் ததும்பி மிக சிரேஷ்டமாய் விளங்குகிறதென்பது கவனிக்கத் தக்கது.

23

ஸபா விளம்பரங்கள்

Jagannatha Baktha Sabha, EGMORE.

(Estd. 1915) At "VEDA VILAS" HIGH ROAD, EGMORE. (Regd. 1929)

SRI JAYANTHI SERIES

(PROGRAMME D. V.)

(Performances Marked * are Monthly Performances for Members.)

PART I.

1. *Wednesday, 14th August at 4-30 p.m.*

Messrs. Semmangudi Srinivasa Iyer ... Vocal
" Rajamanikam Pillai ... Violin
" Umayalpuram Kothandarama Iyer ... Mridangam
" Umayalpuram Viswanatha Iyer ... Gatam

2. *Sunday 18th August at 4-25 p.m.*

Miss Balasaraswathi ... Abhinayam (Dance)
Sri Jayammal ... Vocal
Miss Abhiramasundari ... Violin

*3. *Thursday, 22nd August at 4-30 p.m.*

SRI JAYANTHI Day.

Bramhasri Krishna Bagavathar (of Tiruvidamarudhur) } Rukmani Kalyanam

4. *Saturday 24th August at 5 p.m.*

Sri Dhanammal ... Veena

*5. *Sunday, 25th August at 4-25 p.m.*

Messrs. Maharajapuram Viswanatha Iyer ... Vocal
" Semmangudi Narayanaswamy Iyer ... Violin
" Tanjore Ramadoss Row ... Mridangam
" Venu Naicker of Madras ... Kanjira

6. *Sunday, 1st September at 4-25 p.m.*

MUSICAL ENTERTAINMENT by Miss Sundarakamatchi Ammal of Karaikal

7. *Monday, 2nd September at 4-30 p.m.*

Mr. Tiger Varadachariar ... Vocal
" Semmangudi Narayanaswami Iyer ... Violin
" Dakshinamurthi Pillai ... Mridangam

8. *Sunday. 8th September at 4-25 p.m.*

Srimathi Gayanapatu, Kirthanapatu,— C. Saraswathi Bai Ammal
"Droupadhai Manasamrakshanam"

PART II.

*9. *Sunday. 15th September at 4-25 p.m.*

Messrs. Divya-Nama Gayana, Vacgeyaratna Garu Harinagabushanam Pantulu B.A., of Masulipatam ... Vocal
" T. K. Jayarama Iyer of Kumbakonam ... Violin
" Palghat Subbier ... Mridangam

10. *Saturday, 21st September at 5 p.m.*

Bramhasri Doraiappa Baghavathar ... Gotu Vadyam
(Son of Late Panchapakesa Bagavathar of Tanjore)
Alleppey Rangaswamy Iyer ... Mridangam

11. *Sunday, 22nd September at 4-25 p.m.*

Messrs. Musiri Subramania Iyer ... Vocal
" Karur Chinnaswamy Iyer... Violin
" V. S. Vaidyanatha Iyer of Tanjore ... Mridangam
" Sitarama Iyer ... Morsing

12. *Friday, 27th September at 4-30 p.m.*

Madura Brothers ... Vocal
Master Sankara Iyer ... Violin
Rajappa Iyer of Coimbatore ... Mridangam
Gopalachari ... Konakol

13. *Sunday, 29th September at 4-25 p.m.*

Messrs. Chittore Subramaniam ... Vocal
,, Marungapuri Gopalakrishna Iyer ... Violin
,, Palni Subramania Pillai... Mridangam
,, Mannargudi Vythialingam Pillai ... Konakol

---

*14. *Sunday, 6th October at 4-25 p.m.*

Messrs. Nagaraja Row of Kumbakonam ... Flute
,, Sundaresa Iyer of Tiruvelangadu ... Violin
,, Swaminatha Pillai of Pudukota ... Mridangam
(Son of Vidwan Dakshinamoorthi Pillai)

---

*15. *Saturday 12th October at 5 p.m.*

CHILDREN'S DAY—VIKATAM.

---

16. *Sunday, 13th October at 4-25 p.m.*

Miss. Banni Bai ... Ramadoss

17. *Saturday, 19th October at 4-25 p.m.*

Messrs. Mannargudi Rajagopal Pillai ... Vocal
,, Mayavaram Govindaraju Pillai ... Violin
(Disciple of Vidwan Rajamanikam Pillai)
,, Trichur Sankara Menon. Mridangam
,, Mannargudi Natesa Pillai ... Morsing
,, Parthasarathy ... Kanjira

---

18. *Sunday, 20th October at 4-25 p.m.*

Kolar Sisters ... Vocal
Miss. Tirugokarnam Ranganayaki Ammal ... Mridangam

---

19. *Saturday, 26th October at 4-30 p.m.*

Veena Dhanam's Grand-daughters
Miss. Brindha & Miss. Muktha ... Vocal
,, Abhiramasundari ... Violin
Master Kannan ... Mridangam

---

20. *Sunday, 27th October at 4-25 p.m.*

SECRETARIES' DAY.

ரஸிக ரஞ்சனி சபா (ரிஜிஸ்டர்ட்)

சுந்தரேஸ்வரர் ஹால், மைலாப்பூர்.

அபிநவ பரதாசார்ய மகாகதக கண்டீரவ

பிரம்மஸ்ரீ மாங்குடி சிதம்பர பாகவதர்

அவர்களால்

ருக்மணி கல்யாணம்	...	வியாழன் 22-8-'35	மாலை 4-25 மணி
சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம்		சனி 24-8-'35	,,
பிரஹ்லாத சரித்திரம்	...	ஞாயிறு 25-8-'35	,,
துருவ சரித்திரம்	...	சனி 21-9-'35	,,
விபீஷண சரணாகதி	...	ஞாயிறு 22-9-'35	,,
லக்ஷ்மண சக்தி	...	வெள்ளி 27-9-'35	,,

கிராமபோன் பகுதி

பிராட் காஸ்டு ரிகார்டுகளின் புதிய வெளியீடு:—சென்ற ஜூலைமீ பிற்பகுதியில் வெளியான இரண்டு முக்கியமான ரிகார்டுகளில் ஒன்று சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையினது. இதில் ஒருபக்கத்தில் ஆனந்த பைரவியில் "மதுரா நகரிலோ" என்ற பாட்டு அடங்கியிருக்கிறது. பீடிகையில் ஆனந்த பைரவி ராகம் சுருக்கமாக ஆலாபிக்கப்பட்டிருக்கிறது. பாட்டு நன்றாக பாடப்பட்டிருப்பினும் பமகஸ கமபா என்ற பிரயோகம் வருகிறது சற்று புதுமையாகவே தோன்றுகிறது. மற்றொரு பக்கத்தில் தியாகய்யரின் கேதாரத்திலுள்ள "ராமா நீபை" என்ற கீர்த்தனம் அருமையாக பாடப்பட்டிருக்கிறது. கீர்த்தனத்துக்கு முன் ராகமே காட்டப்படவில்லை. அநுபல்லவியில் "தாமர"—என்று நிறுத்தி விச்ராந்தி கொண்டு பிறகு 'ஸநயனா' என்று பதம் பேதிக்கப்பட்டிருப்பது எவ்வாறு பொருத்தமோ என்பது சந்தேகிக்கத்தக்கது. கடைசியில் இரண்டாவருதம் பல்லவியில் ஸ்வரம் பாடப்பட்டிருப்பது விசேஷமாக விளங்குகிறது.

செம்பை வைத்தியநாத பாகவதர் :— இவருடைய வெளியீட்டில் நந்தன் சரித்திரத்தில் இரண்டு தமிழ் பாட்டுக்கள் காணப்படுகின்றன ஒரு புறத்தில் சுருட்டி ராகம் ஆலாபனை செய்து "கனகசபை திருநடனம்" என்ற பாட்டைப் பாடியிருக்கிறார். ராகத்தைப்பற்றிய வரையிலாவது, பாட்டைப்பற்றியாவது பிரத்தியேகமாகக் கூறவேண்டிய அம்சம் ஒன்றையும் காணோம். பாட்டு முடிவில் சுருட்டி ராகம் கொஞ்சம் பாடப்பட்டு பிறகு கஞ்சிரா மிருதங்கம் ஆவர்த்தம் தனிமையாக வாசிக்கப்பட்டிருக்கிறது. மோர்சிங் கடைசியில் சேர்ந்து இனிமையாக முடிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது பக்கத்தில் பியாக் ராக குறுகிய ஆலாபனையும், அதில் 'இதுதானோ தில்லைஸ்தலம்' என்ற பாட்டும் காண்கிறோம். "அதுவோ இதுவோ என்று" என்னுமிடம் விஸ்தரிக்கப்பட்டுக் காண்கிறது. ராகபாவ பிருகாக்களோடு நன்கு முடிக்கப்பட்டிருக்கிறது.

ஹட்சின்ஸ் ஜூலை வெளியீடு :—இந்த வெளியீடுகளில் பிரதானமாக வுள்ளது பாபநாசம் சிவனின் அருட்பாவே யாகும். ராகங்களை கர்ணாடக சுத்தமாயும், ஸாஹித்யத்தை உணர்ச்சியுடனும் பொருளுடனும் கேட்க வேண்டுமாயின் அது சிவன் முதலான ஒன்றிருவரிடமே ஸாத்தியமென்று இந்த ரிகார்டே காட்டுகிறது. இந்த ரிகார்டில் காணும் சங்கராபரணம், ஸாவேரி இவைகள் காலம் சென்ற மஹா வித்வான் கோனேரிராஜபுரம் வைத்யநாத அய்யரின் நினைவூட்டுகிறது. இரண்டு பக்கங்களிலும் நான்கு ராகங்கள் பாடப்பட்டிருக்கின்றன. முதலாவது சங்கராபரணம், பிறகு ஸாவேரி - இவை இரண்டும் பாவத்தில் இணையற்று விளங்குகின்றன. மற்ற ஒரு பக்கத்தில் ஸிம்மேந்திரமத்யம், கேதாரகௌளம் ஆகிய இரு ராகங்கள் காணப்படுகின்றன. ஸிம்மேந்திரமத்யத்தில் பஞ்சம வர்ஜிய ப்ரயோகங்கள் சிரேஷ்டமானவை. சர்மா சகோதரர் பிடில் ஒத்து வாசித்திருப்பது புகழக்கூடியது. நாதமும், பாவமும் லயித்து உணர்ச்சிததும்பும் இந்த ரிகார்டு கர்ணாடக ஸங்கீதத்தின் பெருமையை ரூபிக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

மதிப்புரைகளுக்காக அனுப்பப்படும் ஸங்கீத புஸ்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் இதர சாமான்கள் 'ஸங்கீத அபிமானி' ஆசிரியருடைய விலாஸத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

உள்ளூர் வர்த்தமானங்கள்

7—7—35 ஜகந்நாத பக்த சபை, எழும்பூர்:—இச்சபையில் இன்று மாலை சேலம் துரைஸாமி அய்யங்கார் வாய்ப்பாட்டு, திருப்பாக்கடல் ஸ்ரீனிவாஸ அய்யங்கார்-பிடில், கும்பகோணம் ரங்கு அய்யங்கார்-மிருதங்கம் இந்த ஜமாக்களால் ஒரு பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. பாடகர் சேலம் துரைஸாமி அய்யங்கார் ஸங்கீத உலகில் பழயவராயினும் சென்னையில் அபூர்வமாகவே இன்று விஜயம் செய்துள்ளனர். இவர் காலஞ்சென்ற ராமநாதபுரம் ஸமஸ்தான வித்வான் ஸ்ரீனிவாஸ அய்யங்காரின் சிஷ்யர். இன்று அபூர்வ வக்ர ராகங்களில் ஸ்வரம் பாடிய மாதிரியிலிருந்து விசேஷத் தேர்ச்சியுடையவரென்று தடையின்றிக் கூறலாம். ஆயினும் யாது காரணத்தாலோ ஸபையினர் பாட்டை மிகுதியாக ரஸித்ததாகக் காணவில்லை. பல ராகங்கள் விரிவாகப் பாடி சங்கராபரணம் பிரதான ராகமாகக்கொண்டு அதில் "சந்திரகளாதர ஸாம்ப சதாசிவ" என்ற பல்லவியை 3 காலம் விரிவாகப் பாடினர். கீர்த்தன பீடிகா ராகங்களுள் ரீதி கௌள, பியாகட ராகங்களும் ராக மாலிகையில் கேதார கௌளவும், உருப்படிகளில் "நீலோத்பல நாயிகே" என்ற தீக்ஷதர் கிருதியும் மேன்மையாக விளங்கின. ஸ்வரப் ரஸ்தாரங்களுள் ஜகன்மோஹினியின் பிரஸ்தாரம் குறிப்பிடத் தகுந்தது. பல்லவி பாடியது ஸம்பிரதாய பேதமிருப்பதாக சிலரால் கூறப்பட்ட போதிலும் மெச்சத் தக்கதாகவே இருந்தது. பக்க வாத்யங்கள் விசேஷித்து விளங்கின. ஆனால் ஸபையோரின் நோக்கத்தைக் கவனியாது, பலர் எழுந்து போவதையும் கவனியாது பாடகர் தாம் ஆரம்பித்ததையே பாடிக்கொண்டு போவதிலிருந்து கச்சேரி மேடை பழக்கம் மிகுதியாக இல்லாதவராகவே காணப்பட்டார்.

14—7—35 இன்று ஷை சபையில் பல பக்க வாத்யங்களோடு மைலாப்பூர் M. ராஜகோபால சர்மாவால் ஒரு பாட்டுக் கச்சேரி நடை பெற்றது. சாத்தூர் கிருஷ்ணய்யங்கார் பாடுவதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்த போதிலும் எதிர்பாராது ராஜகோபால சர்மா பாடியதற்கு ஷை சாத்தூர் கிருஷ்ண அய்யங்காருக்கு தொண்டைகட்டிப் போனதால் பாட சாத்திய மில்லாததே காரணமென்று கூறப்பட்டது. 7—7—35-ல் பாடகர், பக்க வாத்யங்கள் எல்லாரும் "அய்யங்கார்களாக ஒத்து விளங்கியதுபோல் இன்று நாமக்கல் நரஸிம்ம அய்யங்காரின் சிஷ்யரில் ஒருவரான சாத்தூர் கிருஷ்ண அய்யங்காருக்குப் பதிலாக ஷை குருவின் மற்றொரு சிஷ்யரான ராஜகோபால சர்மா பாடியது மிகப் பொருத்தமானதெனக் கூறத்தகும். இளைய வித்வானுன இவருக்கு பிரதான பக்கவாத்யங்கள அமைந்தது அதிர்ஷ்டவசமென்றே சொல்லலாம். இன்று இவருக்கு மதரூஸ் பால கிருஷ்ணய்யர் பிடிலும், மதரூஸ் வேணு நாயகர் மிருதங்கமும், ஆச்சாள் புறம் ஸீதாராமய்யர் மோர்சிங்கும், வேலூர் ஸங்கீத சபை காரியதரிசியான கோபாலாசாரியார் கொன்னக் கோலுமாக உதவிபுரிந்தனர். மேலான ராக பாவமும் காதுக்கு மிக இனிய சாரீரமும் உடைய இவர் கூடிய சீக்கிரம் பிரபலமடைய வேண்டிய வித்வான்களில் ஒருவராகும். கேட்டவரெல்லாம் இவரது த்வனிக் கிடுபட்டு மகிழ்ந்தனர். பாடிய ராகங்களுள் கல்யாணி, கேதார கௌளம், பிலஹரி இவை விசேஷித்து விளங்கின. நிறைய பக்க வாத்யங்கள் பொதுவாக இடைஞ்சலாக இருப்பது போக இன்று நன்கு பரிமளித்தன. மோர்சிங், மிருதங்கம், கொன்னக்கோல் தனி ஆவர்த்தங்கள் காலத்தை மிக ஆக்ரமித்தாலும் கூட கேட்போருக்கு வெறுப்பாகத் தோன்றவில்லை. கச்சேரியினிடையே சபா செக்ரிடரி ஸ்ரீமான் R. வெங்கடாசாரியார் எழுந்து சாத்தூர் கிருஷ்ண அய்யங்கார் பாடமுடியாததைப் பற்றியும், அடுத்த இரண்டு கச்சேரிகள் பூகம்ப சகாய நிதிக்காக வைக்கப்பட்டிருப்பதால் அவைகளுக்கு எல்லாரும் விஜயம்செய்து தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் வேண்டி கொண்டார். கச்சேரி ១ மணிவரையிலும் நடந்து இனிது முடிவுபெற்றது.

20—7—35 மைலாப்பூர் ஸங்கீத சபை:—இச் சபையில் இன்று திருவனந்தபுரம் சகோதரிகளால் "கௌரீ சரித்திரம்" காலக்ஷேபம் நடைபெற்றது. மிகச் சிறிய ஒரு சரித்திரத்தைப் பாட்டுக்கச்சேரியாக நடத்தினுலொழிய 3-அல்லது நான்கு மணி விஸ்தரித்து காலக்ஷேபம் செய்யக்கூடிய சக்தி தற்கால பெண்மணி பாகவதர்களில் அநேகருக்கு இல்லையென்பதை இன்று கதையே ரூபித்துக்காட்டி

விட்டது. பாட்டு பிரதானமாக விளங்கினும் பெரும்பாலும் அது ரஸிக்க முடியாமலிருந்ததென்பதற்கும், கதையின் நிரூபணத்தில் ஹாஸ்யமாவது, உபகதைகளாவது, சொற்பொலிவாவது ஏதும் காணப்படவில்லை என்பதற்கும் விஜயம் செய்திருந்த மிகக் குறைவான ஜன ஸமூகமே அத்தாக்ஷியாகும்.

21—7—35 இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸோஸைடி சென்னை:—இன்று கோகேல்ஹாலில் இதனுதரவில் பிரபல வித்வான்களால் ஒரு இனிய பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. ஸ்ரீமான்கள் முசிரி சுப்ரமணிய அய்யர்-பாட்டு, மைசூர் சௌடய்யா—பிடில், பாலக்காடு மணி அய்யர்—மிருதங்கம், ராகங்களில் ஹிந்தோள, சாவேரி, ஆலாபனையும், கீர்த்தனைகளில், பராக்யால, ராமபாணத்ராண, வும் புகழக்கூடிய அம்சங்கள், வரிசையாக இரண்டு மணி சாவகாசம் சவுக்னகால கீர்த்தனைகளையே பாடியிராமல், மத்தியில் சில துரிதகால உருப்படிகளும் கலந்திருந்தால், கேட்போர்களுக்கு ஊக்கம் அதிகமாயிருந்திருக்கும் என்பது விளங்கிற்று.

மைலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபை:—இதில் ஸ்ரீமான் பட்டம் வெங்கட்ட ராமபாகவதர் "கபீர்தாஸ்" என்ற சரித்திரத்தை காலக்ஷேபரூபமாக நடத்தினர். நல்ல ஞானமும் பேச்சுத் திறமையும் உடைய இவர் பலராலும் ஆதரிக்கத் தகுந்தவராவர்.

மைலாப்பூர் ஸங்கீத சபை:—ஷை சபையில் கீழ்க்கண்ட ஜமாக்களால் ஒரு இனிய பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. ஸ்ரீமான்கள். கீவளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை-பாட்டு, வரகூர் முத்துசாமி அய்யர்—பிடில், நடராஜ அய்யர் மிருதங்கம், பாடகரின் சாரீரம் நயக்குறைவாக இருந்தும் ஒலியை பொருத்தமாய் கம்பீரத்தோடு விளங்கிற்று. தோடி ராகம் விஸ்தாரமாக ஆலாபிக்கப்பட்டு அதில் தியாகய்யரின் "கத்தனவாரிகி" என்ற உருப்படி பாடப்பட்டது. ஆனல் அதில் சரணத்தில் "முத்து க தம்புர பெட்டி" என்ற பதத்திற்குப் பிறகு "சுத்தமைனமனஸுனஸுஸ்வரமுதோ" என்ற ஸாஹித்யத்தை பாடகர் அடியோடு விட்டு விட்டு மேலே "பத்துதப்பக" என்று பாடி முடித்து விட்டார். ஆனல் இதில் ஆச்சரியம் என்ன? தற்காலத்தில் நடக்கும் கச்சேரிகளில் தான் "சுத்தமான மனது, ஸுஸ்வரமான பாட்டு "இரண்டையும் தான் காண்பதே குதிரைக் கொம்பாக இருக்கிறதே. அப்பொழுது அதைப் பாடத்தான் பாடுவானேன் என்று விட்டிருக்கலாம். அப்படியிருந்தால் பாடகர் அன்று சுருதிப் பெட்டி தான் வைத்துப் பாடினராகையால், "முத்து க தம்புர பெட்டி" (அர்த்தம் "அழகாக தம்பூரை வைத்துக்கொண்டு") என்ற பதத்தையும் விட்டு விட்டு ஏன் பாடக்கூடாது? ஊரெல்லாம் ஸங்கீதவாஸனையே கலக்காத பத்திரிகைகளில் கூட "ஸாஹித்யப்பிழைகூடாது, பாவக் குறையை நீக்கவேண்டும்" என்று கதறும் போது அது ஏதும் வாங்காமல் இப்படியும் பாடுகிறார்களே என்பது தான் விநோதம். தவிற சங்கராபரணம் ராகம், அதில் "சக்ககீ பஜனஜேஸே வாரிகி தக்குவகலதாஸி" என்ற பல்லவி இவை நன்கு வழங்கப்பட்டன. பிடில் முத்துவைய்யர் சங்கராபரணமும் தோடியும் தேன் வர்ஷமாகப் பொழிந்தார். நடராஜய்யர் ஆவர்த்தங்கள் நன்கு வாசித்தாரென்றே கூற வேண்டும். கால அதிக்ரமிப்பைக் கூட கவனியாமல் கச்சேரி 9-15 வரை ஒட்டப்பட்டு நன்கு முடிவு பெற்றது.

27—7—35. சென்னை ஸங்கீதஸமாஜம் :—இதனுதரவில் இன்றுமாலை கானமந்திரத்தில் கீர்வாணி புத்திரிகளால் ஒரு பாட்டுக் கச்சேரி நடைபெற்றது பாடியவற்றுள் பூரிகல்யாணி ராகமும் அதில்பரமபாவன ராம என்ற கீர்த்தனையும், நிரவல் கல்பனஸ்வரங்களோடு விஸ்தாரமாக வழங்கப்பட்டது.

28—7—35. மைலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபை :—இச்சபையில் மைலாப்பூர் ஸுந்தரேச்வரர் ஹாலில் கீழ்க்கண்ட பிரபல வித்வான்களால் ஒருகச்சேரி நடைபெற்றது. ஸ்ரீமான்கள் அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் பாட்டு, கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை—பிடில், கும்பகோணம் கோதண்டராம அய்யர் மிருதங்கம். பாடகரின் சாரீரம் இன்று மிக மேன்மையாக அமைந்திருந்ததோடு பெரும்பாலும் ஜனங்களுக்கு மிகப்பழக்கமான உருப்படிகளே பாடப்பட்டன. மானஸ குருகுக (ஆனந்த பைரவி), நீசித்தமு (தன்யாசி), ஸ்ரீ ஸுப்ரமண்யாய நமஸ்தே (காம்போதி), அக்ஷயலிங்கவிபோ (சங்கராபரணம்), எனக்குன்னிருபதம் (ராகமாலிகை), மீனாக்ஷி (பூரிகல்யாணி ? வாடோராதைவமு (பந்துவராளி ?) இந்தக் கீர்த்தனைகளில் ஏதாவ தொன்றாவது வந்திருந்தவர்களுக்கு தெரியாமலிருக்கக்கூடுமோ என்பது சந்தேகமே. விசேஷ உருப்படி

கள் கணக்கில்லாமல் பாடக்கூடிய நம்முடைய வித்வான் ஏன் ஒன்றிண்டு புது உருப்படிகள் பாடி வந்திருந்த பலவித்வான்களுக்கு சுவை யூட்டக்கூடாது என்று பலர் கேட்பது நியாய மென்றே சொல்லவேண்டும். பெரிய வித்வான் களின் மூலமே பல உருப்படிகள் ஸதஸில் பிரபலமாக வேண்டியதிருக்க அவர்கள் சுற்றிச் சுற்றி பத்துப்பன்னிரண்டு கிருதிகளை வைத் துக் கொண்டு 4-மணிசாவகாசம் போக்குவது ஒவ்வொரு தடவையிலும் எக்காரணத்தைக் கொண்டோ நம்மால் கூறமுடியாது. தோடி ராகம் பிரதானராகமாக வழங்கப்பட்டு அதில் "மானித குணஸுக்ஞானதுரீண" என்ற பல் லவியும் மிகஅழகாகப் பாடப்பட்டது. எப் போதையும் விட சில்லரை உருப்படிகள் குறைவென்றே கூறவேண்டும். ஸ்ரீஸுப்ர மண்யாய நமஸ்தே "என்றுபாடகர் தாழ்ந்த ஆதாரச்ருதியில் மந்திரஸ் தாயியில் பாடும் போது "நீங்கள் அதைக்கேட்க நான் விடமாட் டேன்" என்று வருணபகவான் கோபித்து ஒரே வர்ஷமாக மழை பொழிந்தார். பாடகர் மேலே "வாஸவாதி" என்று ஆரம்பித்தவுடன் தான்வருணனும் கடாக்ஷித்து மழை நின்றது. வருணனுக்கே "ஸ்ரீ ஸுப்ரமண்யாய" கேட்டு அலுத்துவிட்ட தென்றால் கேவலம் சலன சிந்தையுடைய மானிடரைப்பற்றிக் கேட் பானேன்? கழுத்தில் ஒரு மாலை அணிந்தால் திருப்தியடையாமல் 10மாலைகளை கனத்தைக் கூடலக்ஷியம் செய்யாமல் அணிவதுபோல, காம்போதி ராகத்தில் ச்ரோதாக்கள் பல விசேஷ உருப்படிகளை மாறிமாறிப்பாடிக் கேட்க விரும்புவார்கள் என்பதில் என்ன தடை? இன்றைய கச்சேரி வழக்கம்போல் ஞானபாவம் சிறந்துவிளங்கிற் றென்பது பொதுஜன அபிப்ராயம்.

ஸரஸ்வதிகான சபை, நுங்கம்பாக்கம்:— இதனுதரவில் பட்டம் வெங்கட்டராம பாக வதர் "லக்ஷ்மண சக்தி" காலக்ஷேபம் விமரிசையாக நடத்தினர். இவருடைய வாக் சாதுர்யம் விசேஷமாகக் கூறவேண்டிய அம்ச மாகும்.

ஸங்கீத ஸமாஜம் சென்னை:—இன்று இங்கே தஞ்சாவூர் சகோதரர்கள் ஒரு இனியபாட்டுக் கச்சேரி செய்தனர். அண்ணுமலை ஸங்கீத கலாசாலை ஆசிரியரான பொன்னையா பிள்ளை யின் குமாரர்களான இவர்கள் எல்லா அம்சங் களிலுமே முன்னுக்கு வரத்தக்கவர்களென்று தடையின்றிக் கூறலாம்.

4—8—35. ஜகந்நாதபக்த சபை, எழும் பூர்:—இன்று இங்கே ஸுசிந்தரம் L. பரசுராம பாகவதரவர்களால் தங்கபக்கவாத்யங்களுடன் ஒரு பாட்டுக்கச்சேரி நடைபெற்றது. நல்ல சாரீரம் வாய்ந்த இந்த இளைஞர் கூடிய சீக்கிரம் தேர்ச்சி பெற்று முன்னுக்குவரக் கூடியவர் என்பது திண்ணம். பிடில்வாசித்த அன்னரின் தகப்பனுர் லக்ஷிமிநாராயண அய்யர் பாட்டுக்கு ஒத்து பிடில் வாசித்ததும், பார்த்தஸாரதி கஞ்சிராவும் குறிப்பிடக்கூடிய அம்சங்கள்.

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடி, மதருஸ்:-கோக்கேல் ஹாலில் இன்று கீழ்கண்ட பிரபல வித்வான்களால் ஒரு இனியபாட்டுக் கச்சேரி நடந்தது. செம்மங் குடி ஸ்ரீனிவாசய் யர் பாட்டு, மைசூர் சௌடய்யா பிடில், புதுக் கோட்டை தக்ஷிணுமூர்த்திப் பிள்ளை—மிரு தங்கம். அருமையாக அமைந்த இன்று கச்சேரி யில் பியாகடை, கல்யாணி உருப்படிகளும், பைரவி ராக ஆலாபனையும் பல்லவியும், தக்ஷிணு மூர்த்தி பிள்ளையின் மிருதங்க ஆவர்த்தனங்களும் பிரத்யேகமாகக் குறிப்பிடக்கூடியவை.

5—8—35. ஜகன்னுதபக்த சபை, எழும் பூர்:—இன்று இதனுதரவில் ஸாகேத நிலயத் தில் மைலாப்பூர் பிரும்ம ஸ்ரீ கோடீச்வர அய்யரால் ஸ்கந்தபுராண ஸீரீஸில் "சுப்ரமணி யக்கடவுளின் பால்யலீலை" என்ற பாகம் உயர் தர ஸங்கீதத்தோடு உபன்யசிக்கப்பட்டது. இந்த ஸீரிஸ் ஜனங்களால் இன்னும் ஏராளமாக ஆதரிக்கத்தகுந்தது என்பது அந்த உபன்யா சங்களைச் செவியுற்ற சிலருக்கே விளங்கும்.

6—8—35. இன்று ஷெ சபையில், அகஸ் தியம்பள்ளி கவிசக்ரவர்த்தி ராமவைத்யநாத சர்மா அவர்களால் "திருநீலகண்ட நாயனர்" காலக்ஷேமம் நடந்தது. அவருடைய சகோதரர் சிதம்பரம் அண்ணுமலை ஸங்கீதக் கல்லூரியில் தேர்ச்சியடைந்த ஹரிஹரசர்மா இன்றைக்கு மிருதங்கம் வாசித்தது குறிக்கத் தகுந்தது.

வெளியூர் செய்திகள்

கல்கத்தா. இவ்வூரில் சென்ற சில மாதங்களாக பேசும் பட தயாரிப்பின் காரணமாக விஜயம் செய்திருந்த ஸங்கீத வித்வான் மஹாராஜபுரம் விச்வநாத அய்யரால் உள்ளூர் N. R. அய்யர் மெமோரியல் கல்விச்சங்கத்தின் உதவிக்காக சென்ற 6-7-35 அன்று மாலை ஒரு இனிய பாட்டுக் கச்சேரி தென் இந்திய சங்கத்தின் கட்டிடத்தில் நடந்தேறியது. கும்பகோணம் T. K. ஜயராம அய்யர் பிடிலும், திருவனந்தபுரம் ராமஸ்வாமி அய்யர் மிருதங்கமும் வாசித்தனர். கிருதிகளில் அப்பராம, ஸீதம்ம, ஸீதாவர, நினுவினு முதலியவைகளும், ராகங்களில் தேவகாந்தாரியும், மோகனமும், பின்கூறிய ராகத்தில் பல்லவியும் சிறந்து விளங்கின. முடிவில் தென் இந்திய சங்கத்தின் சார்பாக செக்ரிடரியாரால் பாடகருக்கு ஒரு தங்க மெடல் அளிக்கப்பட்டது.

(நம் நிருபர்.)

மதுரை. இவ்வூர் ஸங்கீத ஸம்ரக்ஷண சபையின் ஆதரவில் சென்ற 21-7-35 மாலை 4-15-முதல் பிரும்மஸ்ரீ மாங்குடி சிதம்பர பாகவதரவர்களால் "விபீஷண சரணாகதி" என்னும் ஸத் கதா காலக்ஷேபம் அதி விமரிசையாய் நடந்தேறியது. தற்காலத்தில் பாகவத பரம்பரையில் சிரேஷ்டராயும், பெரிய வித்வானுமாகிய இவர் தம் அஸௌகரியங்களையும் பொருட்படுத்தாது தள்ளாதகாலததில் 5 மணி நேரம் இடைவிடாமல் கதையை ஜனங்களுக்கு பக்தி உண்டாகுமாறு எடுத்துச் சொன்னார். அவருடைய தெலுங்கு கீர்த்தனைகளின் தமிழ் மொழி பெயர்ப்பானது புகழக்கூடிய அம்சமாகும். ஸபையோர் மிக அமைதியாக இருந்து கேட்டனர் என்பது கதையின் மேன்மைக்கு அத்தாக்ஷி யாகும்

நாகபுரி. இந் நகர் மதராஸி பாடசாலையில் ஒருமாத காலமாக கும்பகோணம் ஸ்ரீமான் வாதிராஜ பாகவதர் அவர்களால் நடத்தப்பட்டு வந்த ராமாயணம் ஸீரிஸ் ஞாயிறன்று (4-8-35) மாலை ஸ்ரீராம பட்டாபிஷேகத்துடன் இனிது நிறைவேறியது. அன்னாரவர்களின் காலக்ஷேபங்களை இந்நகர் மதராஸிகள் மிகவும் சிரத்தையுடனும், குதுகலத்துடனும் கேட்டாநந்தித்தார்கள். இவ்வூர் டி. ஐ. ஜி. பி. டி. ஆபீஸ் ஸூபரிண்டெண்டெண்ட் Mr. A. ராமஸ்வாமி அய்யர் அவர்களால் வஸ்த்ர மரியாதையும் சங்கத்தின் பிரஸிடென்ட் Mr. பத்மனாபய்யர் அவர்களால், பொதுஜனங்களின் சார்பாக பண முடிப்பும் பாகவதருக்கு அளிக்கப்பட்டது. விசேஷ அம்சங்கள் :—அன்னாரின் வடமொழி வித்வத்துவம் திட்டமான கம்பர் செய்யுளும், அனுபவ சங்கீதமும் உருக்கமான சொற் பொழிவும், விலாப்புடைக்கும் ஹாஸ்யங்களும் கவனிக்கத் தக்கவை.

(ஒரு நிருபர்.)

Edited and Published by M. Vaidyanathaswami, B. A., L. T., G. D. A., and
Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty Street, G. T, Madras.

சந்தா விவரம்

உள் நாட்டுக்கு வருஷச் சந்தா தபால் செலவுள்பட	ரூ.	1—8—0
வெளி நாடுகளுக்கு வருஷச் சந்தா	ரூ.	2—8—0
தனிப் பிரதி:—		
சென்னை நகரில் ஒன்று		0—2—0
வெளி ஊர்களில் ,,		0—2—0

குறிப்பு:—

(1) சந்தாக்கள் யாவும் முன்பணமாக நேராக மானேஜருடைய விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

(2) ஒரு வருஷத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

(3) நம்முடைய ஏஜெண்டுகள் யாவரும் விற்பனை ஏஜெண்டுகளே. அவர்களிடம் செலுத்தும் சந்தா தொகைகள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

(4) சந்தாக்காரர்கள் தங்கள் விலாச மாறுதல்களை உடனுக்குடனே தெரியப்படுத்த வேண்டும்.

விளம்பர விகிதம்

அட்டையின் பின் பக்கத்துக்கு தடவை ஒன்றுக்கு	ரூ.	20—0—0
அட்டையின் 2-வது 3-வது பக்கங்களில் போட தடவை ஒன்றுக்கு முழுப்பக்கம்	ரூ.	15—0—0
,, அரைப்பக்கம்	ரூ.	8—0—0
மற்ற பக்கங்களில் போட தடவை ஒன்றுக்கு		
முழுப்பக்கம் ...	ரூ.	12—0—0
அரைப் பக்கம் ...	,,	7—0—0
கால் பக்கம் ...	,,	4—0—0
ஒரு காலம் 1" ...	,,	2—0—0

விளம்பரக் கட்டணம் முழுத் தொகையும் அட்வான்ஸாகக் கட்டப்படவேண்டும்.

நிருபர்களுக்கு முக்கிய அறிவிப்பு

(1) ஸங்கீத அபிமானியில் பிரசுரிக்க வேண்டியனுப்பும் விஷயங்கள் கர்னாடக அல்லது தேசீய ஸங்கீதம், நாடகமேடை, பரத நாட்டியம், ஹரிகதா காலக்ஷேபம், இவைகளை ஒட்டினவைகளாகவே இருக்கவேண்டும்.

(2) மூன்று நான்கு பக்கங்களுக்கு மேற்படாத வியாசங்கள், பாட்டுக்கள், குறிப்புகள், போதனைமுறை விஷயங்கள், கட்டுரைகள். ஆராய்ச்சிகள், ஸங்கீதகுணப் பரிசோதனை, மற்றும் ஸங்கீத சம்பந்தமான வேடிக்கைத் துணுக்குகள் முதலியன சொற்சுவை, பொருட்சுவை, ஹாஸ்யம், கல்பனை இவற்றோடு சேர்ந்திருப்பின் எளிதில் ஏற்றுக்கொள்ளத் தகுந்தவை.

(3) நிருபங்களில் சிறந்தவை என்று தெரிந்தெடுக்கப்பட்டுள்ளவைகளுக்குத் தகுந்தபடி பரிசளிக்கப்படும்.

(4) பிரசுரிக்க வேண்டியனுப்பும் நிருபங்களைத் தவிர தனிக் கடிதங்கள் அவசியமில்லை. நிருபங்களில் எழுதுபவர் பெயரும் முழுவிலாசமும் குறிக்கப்பட்டால் போதும்.

(5) நிருபங்கள் "ஸங்கீத அபிமானி"க்கென்றே எழுதியனுப்பப்பட வேண்டும். நிருபங்களின் காபிரைட், பிரசுர உரிமைகள் பத்திராதிபருடையதே யாகும்.

(6) மறுக்கப்பட்ட நிருபங்கள் தபால் ஸ்டாம்புகள் அனுப்பினலன்றி திருப்பி அனுப்பப் படமாட்டாது.

(7) ஒவ்வொரு பதிப்பிலும் பிரசுரிக்கவேண்டியனுப்பும் விஷயங்[illegible] தெளிவாகவும் பேப்பரின் ஒரே பக்கத்திலும், எழுதி ஸங்கீத அபிமானி ஆபீஸுக்கு முன் மாதம் 10 தேதிக்குள் சேரும்படி அனுப்பப்படவேண்டும்.

(8) நிருபர்களின் அபிப்ராயங்களுக்கு பத்திராதிபர் சிறிதும் கட்டுப்படார்.

Official Programme of Music Broadcast by the Corporation of Madras
FOR AUGUST, 1935

DATE.	EVENING PROGRAMME. 5-30 p.m. to 7-30 p.m.	PARTICULARS OF MUSIC.	
1—8—35	Mr. K. Bhyravamurthy Pantulu	South Indian Music	(Veena)
2—8—35	Shree Swarna Saraswathi Bai	" "	(Vocal)
3—8—35	Mr. P. V. Subramania Iyer	" "	"
4—8—35	Shree Udipi Lakshmi Bai	" "	"
5—8—35	Miss K. Meenakshi	" "	"
6—8—35	Mr. L. Parasurama Iyer	" "	"
7—8—35	Mr. S. Sodekar	Hindustani Music	(Vocal)
8—8—35	Mr. Manickam Pillay of Mannargudi	South Indian Music (Nadaswaram with Thambura and Mridangam)	
9—8—35	Miss M. S. Mohanambal	South Indian Music	(Vocal)
10—8—35	Sangeetha Bushana M. D. Parthasarathy	" "	"
11—8—35	Gayaka Sarvabhouma Parupalli Ramakrishnayya Pantulu	" "	"
12—8—35	Sreemathi A. Banumathi	" "	"
13—8—35	Mr. Kaliyakudi Vydianatha Iyer	" "	"
14—8—35	Mr. K. S. Venkatramiah (alias Papa)	" "	(Violin)
15—8—35	Mr. Sattianarayan	Hindustani Music	(Vocal)
16—8—35	Shri C. Pappathi Ammal	South Indian Music	"
17—8—35	Mr. C. Gangadharam Pillay	" "	"
18—8—35	Shree Lakshmiratnammal (d/o Veena Dhanammal)	" "	"
19—8—35	**Mr. M. Vydianathaswami** **at 5-45 p.m.** Radio Talk No. 43 on " Women and the Anti-Tuberculosis Campaign " by Mrs. H. S. Hensman.	" "	"
20—8—35	Mr. R. Chandra	South Indian Music	(Vocal)
21—8—35	Mr. S. A. Rahman	Hindustani Music	"
22—8—35	Mr. R. Nagaraja Rao of Kumbakonam	South Indian Music	(Flute)
23—8—35	Shri M. Rangamma	" "	(Vocal)
24—8—35	Mr. D. Subbaramaiya of Bangalore	" "	"
25—8—35	Mr. Vedanta Baghavathar of Kallidakurichi	" "	"
26—8—35	Gramophone records	European Music	
27—8—35	Mr. P. S. Sundaram Iyer	South Indian Music	(Vocal)
28—8—35	Mr. Hafeez Khan	Hindustani Music	"
29—8—35	Mr. J. S. Bully Babu	South Indian Music	(Mouth Organ)
30—8—35	Miss T. Gyanambal	" "	(Vocal)
31—8—35	Mr. P. S. Vethachalam	" "	"

CORPORATION OF MADRAS,
ELECTRICAL DEPARTMENT.
Madras 22nd July 1935.

C. V. K. CHETTY
ELECTRICAL ENGINEER.

மஹாலக்ஷ்மி ஸ்டூடியோஸ

லிமிடெட்.

(இந்திய கம்பெனி ஆக்ட்படி இணைக்கப்பட்டது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 5,00,000.

3,000 ஷேர்கள், ஒரு ஷேர் 100 ரூ. மதிப்புள்ளது.

10,000 ஷேர்கள், ஒரு ஷேர் 20 ரூ. மதிப்புள்ளது.

டைரக்டர்கள்

ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி, பி.ஏ., பி.எல்., எம். எல். ஏ.

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ அய்யங்கார், பி.ஏ., மைலாப்பூர்.

,, ஆர். தளவாய், எம். எல். ஸி. ஜமீன்தார், திருநெல்வேலி.

ஸ்ரீமதி அலமேலு ஜயராம அய்யர் 'ஸ்ரீனிவாஸ்' மைலாப்பூர்.

வித்வான் டி. சௌடய்யா, ராமமந்திரம், மைசூர்.

வித்வான் முசுரி சுப்பிரமணிய அய்யர் (எக்ஸ் அபிஷியோ)
6, ஆலிவர் ரோட், மைலாப்பூர்.

ஸ்ரீ கே. விஸ்வநாதன், பி.ஏ., (எக்ஸ் அபிஷியோ)
பிலிம் வர்த்தகர், மதராஸ்.

பாங்கர்கள்: இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட்.
,, இண்டோ கர்னுடிக் பாங்கி லிமிடெட்.

தற்போதைய வெளியிடும் எமது மஹத்தான படங்கள்:—

'வஸந்தசேனை' (தமிழ்) 'மீராபாய்' (தமிழ்)
'பக்த குசேலா' (தமிழ்) 'சாரங்கதரா' (தெலுங்கு)

ஷேர் விண்ணப்பம் செய்து கொள்ளுபவர்களும், மற்ற விவரங்கள் தெரிய விரும்புவோர்களும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:—

மஹாலக்ஷ்மி ஸ்டூடியோஸ் லிமிடெட்,

ஆபீஸ்:—7, பெல்ஸ் ரோட், :: திருவல்லிக்கேணி, மதராஸ்.

வெகு நேரம்
பாடும்

Broadcast

வெகு
அருமையாக
பாடும்

ரிகார்ட்கள்

மேடையில் மிக்க பிரசித்திபெற்ற 'கோவலன்' 'குலேபகாவலி' என்னும் நாடகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தர்க்கம்.

சங்கீத வித்வான்
சுப்பய்ய பாகவதர்
மேடை குயில்
எம். எஸ். விஜயாள்
இவர்களால் நடத்தப்
படுவதைக் கேளுங்கள்.

B. T. 2099

அண்ணமுண்ணைமலே
—கோவலன்

காதல் கோண்டேன்
—குலேபகாவலி

செம்பை வைத்யனுதபாகவதர்
G. T. 4057

G. T. 4057
கனகசபை திருநடனம்
—சுருதி
இதுதானேதில்லை ஸ்தலம்
—பியாக்

R. 4059
மதுரா நகரிலோ
—ஆனந்த பைரவி
ராமாநீ பை —கேதாரம்



சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை
R. 4059

தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்

மதருஸ் — பம்பாய் — கல்கத்தா — கொலம்போ.